










# தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

# ஆண்டறிக்கை 2009





# உள்ளடக்கம் பக்கம்


| | |
|---|---|
| தொலைநோக்கும் பணித்திட்டமும் | 02 |
| கூட்டுரிமை இலக்குகள் | 03 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் (NITF) பணிப்பாளர் சபை | 05 |
| தவிசாளரின் மீளாய்வு | 06 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் – ஒரு பொழிப்பாக | 10 |
| சூழல் மீளாய்வு | 11 |
| கூட்டுரிமைச் சமூகப் பொறுப்பு | 13 |
| கூட்டுரிமை ஆளுகை | 14 |
| நட்ட ஆபத்து முகாமைத்துவம் | 16 |
| கணக்காய்வு அறிக்கை | 19 |
| வருமானக் கூற்று | 26 |
| ஐந்தொகை | 27 |
| திரட்டிய நிதியத்திலான மாற்றங்கள் பற்றிய கூற்று | 28 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 29 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 30 |
| நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புரைகள் | 34 |
| நிதி மீளாய்வு | 39 |
| அக்ரஹார காப்புறுதி பற்றிய மீளாய்வு | 42 |
| மோட்டார் வாகனக் காப்புறுதி பற்றிய மீளாய்வு | 44 |
| மீள் காப்புறுதி பற்றிய மீளாய்வு | 46 |
| வே.க.சி.கொ.ப. நிதியம் பற்றிய மீளாய்வு | 48 |
| பொதுக் காப்புறுதி பற்றிய மீளாய்வு | 50 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி பற்றிய மீளாய்வு | 53 |
| நான்காண்டுப் பொழிப்பு | 55 |
| கூட்டுரிமைத் தகவல்கள் | 57 |

## தொலைநோக்கு

இல்லாக்குறையுடைய அனைத்துப் பிரிவினருக்கும்
காப்பு வலையமைப்பொன்றையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துதல்

## பணித்திட்டம்

பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்: –

- சமூகத்தின் சகல இல்லாக்குறையுடைய பிரிவினரும் தாங்கிக் கொள்ளக்கூடியதும் வினைத்திறனானதும் முற்போக்கானதுமான காப்புறுதித் திட்டங்களை ஏற்படுத்தல்.
- மாற்றமுறும் தேவைகளின் ஊடாக எழும் உயர் இடர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் பொருட்டு வளங்களைத் திரட்டுதலும் வேறு ஏற்பாடுகள் வழியே உள்நாட்டுச் சந்தைக்குத் தீர்வுகளை வழங்குதலும்.
- உள்நாட்டுக் காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக வாய்ப்பளிக்கும் பொருட்டு இலங்கையில் மீள் காப்புறுதிச் சந்தையொன்றை ஏற்படுத்தல்.

## கூட்டுரிமை இலக்குகள்

- சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கக்கூடியவாறு உத்தேச இலக்குக் குழுக்களின் நலனோம்புகைக்கான புதிய காப்புறுதித் திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துதல்.

- மீள் காப்புறுதிச் சந்தையில் குறைந்தபட்சம் 50% சதவீதத்தைக் கைப்பற்றும் பொருட்டு மீள் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்கி முகாமை செய்தல்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் செயற்படுத்தப்படும் சகல காப்புறுதித் திட்டங்களினதும் முகாமைத்துவத்தைத் தன்னியக்கப்படுத்துதல்.

- சகல பயனுகரிகளுக்கும் மிகவும் வினைத்திறனான ஒரு சேவை வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.

- அடுத்துவரும் ஐந்தாண்டு காலப்பகுதியில் ஆகக்கூடிய வருவாயை ஈட்டும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் முதலீடுகளை முகாமை செய்தல்.

- கல்வி விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக குறித்த காப்புறுதித் திட்டங்களில் பங்குபற்றும் பாத்தியதையுடையோரைத் தூண்டுதலும் ஊக்குவித்தலும்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் எதிர்கால நடவடிக்கைகளை எளிதுபடுத்துவதற்குப் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நடவடிக்கை முறைகளைப் பலப்படுத்துதல்.

- இடர்வரவு முகாமைத்துவ அலகொன்றை நிறுவி சந்தை ஆய்வுகளின் ஊடாக தமது எதிர்கால காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு வழிகாட்டுதல்.

- கட்டாய இயற்கை அனர்த்த காப்புறுதி உத்தரவாதத் திட்டமொன்றை ஏற்படுத்தல்.

- இளம் தலைமுறையினரின் பங்கேற்பை ஊக்குவிப்பதன் மூலம் காத்திரமான காப்புறுதிப் பணியாள்தொகுதியின் எதிர்காலத்தில் வளரும் தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டு கல்வி மத்திய நிலையமொன்றைச் செயற்படுத்துதல்.

# தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை

- **திரு. சேனக்க டி. அபேகுணசேக்கர அவர்கள் – தற்போதைய தவிசாளர்**
  *PGD. BBM (UK), MBA (USA), DIIR*

**2009**

- **திரு. ஏ.ஏ. விஜேபால அவர்கள் – தவிசாளர்**
- திரு. உதய ரஞ்சித் செனெவிரத்ன அவர்கள் - சபை உறுப்பினர்
- திரு. டப்ளிவ்.எச். பியதாச அவர்கள் - சபை உறுப்பினர்
- மருத்துவர் நிஹால் ஜயதிலக அவர்கள் - சபை உறுப்பினர்
- மருத்துவர் லோஹித்த சமரவிக்கிரம அவர்கள் - சபை உறுப்பினர்
- மருத்துவர் பி.டப்ளிவ்.சி. பனாகொட அவர்கள் - சபை உறுப்பினர்
- திரு. கே.ஏ.டி. ஹேமரத்ன அவர்கள் - சபை உறுப்பினர்
- திருமதி லசினி சேரசிங்க அவர்கள் - சபை உறுப்பினர்
- திரு. ஜே. தடல்லகே அவர்கள் - சபை உறுப்பினர்
- திரு. ஆர். சேமசிங்க அவர்கள் - சபை உறுப்பினர்

# தவிசாளரின் மீளாய்வு



## 2009 ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தல்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை சார்பாக 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான 2009 ஆண்டறிக்கையையும் கணக்காய்வு செய்த நிதிக் கூற்றுகளையும் சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

## பொருளாதாரம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் துணிச்சலான தலைமைத்துவமும் பாதுகாப்புப் படையினரின் பெரும் பிரயத்தனமும் காரணமாக, மூன்று தசாப்த காலப் போர் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடிய விதத்தில் ஓய்வடைந்தபோதும், அதிகரித்த போர்ச் செலவினம், உலகளாவிய பொருளாதார நெருக்கடி நிலைமை போன்றே, இலங்கையின் நிதி நெருக்கடிநிலை காரணமாக பொருளா–தாரம் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் சந்தை விலைகளின் அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4,825 பில்லியன் ரூபாவாக இருந்ததுடன், இன்றைய சந்தை விலைகளின் அடிப்படையில் மொத்தத் தேசிய உற்பத்தி 4,769 பில்லியன் ரூபாவாக அமைந்தது. மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் 4.8% ஆகவும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 3.5% ஆகவும் இருந்தது. எனினும், இலங்கையில் சமாதானம் மலர்ந்ததை அடுத்து 2009 ஆம் ஆண்டின் பின்னரைப் பாகத்தில் இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவு, மீண்டும் அதன் அசல் இயல்பை நோக்கி நகர்வதாக மாறியுள்ளது.

## மேனோக்கு

தனது ஆரம்ப அக்ரஹார காப்புறுதித் திட்டத்துடன் 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம், 2006 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சமூக நலனோம்புகை சார்பான போக்கைச் சுட்டியதுடன், அது தனது காப்புறுதித் தொழிலின் நோக்கெல்லையை விரிவடையச் செய்துள்ளது. நிதி, திட்டமிடல் அமைச்சினால் உள்வாங்கப்பட்ட இன்றைய அக்ரஹார காப்புறுதித் திட்டம் போன்றே வேலைநிறுத்தங்கள், கிளர்ச்சிகள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தை விஸ்தரிப்பதற்குப் புறம்பாக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டம் போன்றே, 20% சதவீத நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி 2008 ஆம் ஆண்டின் இறுதிப் பாகமளவில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் தனது காப்புறுதி நோக்கெல்லையை விசாலிப்படையச் செய்தது. மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டத்தை தனியார்துறையையும் உள்ளடக்கக்கூடியவாறு விஸ்தரிப்பதன் மூலமும் தீ அபாயக் காப்புறுதி, கடல் அபாயக் காப்புறுதி, நானாவித காப்புறுதி போன்ற பொதுக் காப்புறுதி வியாபாரங்களிலும் காலடி எடுத்து வைத்ததன் மூலமும் 2009 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தனது வியாபார நோக்கெல்லையை மேலும் விஸ்தரித்துக் கொண்டது.

## தேசத்திற்கும் காப்புறுதித் தொழிலுக்கும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் வழங்கிய பங்களிப்பு

2009 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு 2.5 மில்லியன் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும், படையினரால் தமிழ் சிவில் பிரஜைகள் விடுவிக்கப்பட்டதை அடுத்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் மெனிக்ஃபாம் முகாமுக்கு உணவு, பானங்கள் முதலியன அன்பளிப்புச் செய்யப்பட்டது.

அரசாங்கத்தின் பொருளாதாரச் சுமையை எளிதுபடுத்தும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் 2009 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திட்டத்திற்கு 2.25 பில்லியன் ரூபா கொடையாக வழங்கப்பட்டது.

அரச மற்றும் பகுதியளவு அரச துறைக்கு பெரிதும் சகாயமான சிக்கன கட்டண அடிப்படையில் அக்ரஹார மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதன் ஊடாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் அரச நிதி வளத்தைப் பேணத் துணிந்துள்ளது. 20% நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை குறிப்பிடத்தக்க அளவில் தடுக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் துணிந்தமையால், தேசிய பொருளாதார வளர்ச்சி மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், வெளிநாட்டு மீள் காப்புறுதி தாரர்களுக்கு ஒப்பீடாக உள்நாட்டு காப்புறுதி தாரர்களுக்கு சிக்கனமான மீள் காப்புறுதிச் சேவைகளை வழங்கும் ஒரே ஒரு உள்நாட்டு மீள் காப்புறுதிதாரராக தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் பரிணாமம் அடைந்துள்ளது. வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தை நிலைபேறான அடிப்படையொன்றின் மீது நிறுவியதன் ஊடாக பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுடன் ஒத்துழைத்து வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் ஊடாக எழும் சமூக அனர்த்தங்கள் சார்பாக சிக்கனமான முறையில் உத்தரவாதமளிக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் துணிந்துள்ளது.

இயற்கை அனர்த்தங்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக அனர்த்த நிதியம் நிறுவப்பட்டதையும் பெருந்தோட்டப் பயிர்கள் மற்றும் கால்நடைவளர்ப்புக் காப்புறுதியை முன்னேற்றும் பொருட்டு பெருந்தோட்டப் பயிர்க் காப்புறுதி, கால்நடை வளர்ப்புக் காப்புறுதி ஆகியவற்றை நோக்கி பல்லினத் தன்மை அடைதல் போன்றே ஏற்றுமதிக் கடன் காப்புறுதியை நோக்கி பல்லினத் தன்மை அடைதலும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உபாயமுறை நோக்காக அமைந்துள்ளது. ஒன்றிணைவதன் ஊடாக விரிவடையும் எண்ணமும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு உள்ளது.

## நிதிச் செயலாற்றுகை

2008 ஆம் ஆண்டில் 3,427 பில்லியன் ரூபாவான ஈட்டிய வருடாந்த வருமானத்துடன் ஒப்பிடும்போது, 2009 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் ஈட்டிய மொத்த கட்டுப்பண வருமானம் 4,019 பில்லியன் ரூபாவாகும். இது 17.26% சதவீத வளர்ச்சியாகும். 2008 ஆம் ஆண்டின் மொத்தத் தேறிய வருமானமான 2,862 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது, 2009 ஆம் ஆண்டின் மொத்தத் தேறிய வருமானம் 3,202 மில்லியன் ரூபாவாகும். இது 11.88% சதவீத வளர்ச்சியாகும். தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிதிச் செயலாற்றுகை, நிதி மீளாய்வுப் பிரிவின் கீழ் விரிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

## மதிப்பீடு

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்கள், நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர், திறைசேரியின் செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சின் பணியாள்தொகுதி உள்ளிட்ட எமது காப்புறுதிப் பத்திரதாரர்களுக்கு, உரிமைதாரர்களுக்கு, காப்புறுதித் தரகு தாரர்களுக்கு, மீள் காப்புறுதிதாரர்களுக்கு, மீள்காப்புறுதித் தரகுதாரர்களுக்கு, மதிப்பீட்டாளர்களுக்கு, நட்டச் சீராக்குநர் களுக்கு, இடையீட்டாளர்களுக்கு, சேவை பெறுநர்களுக்கு, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் முன்னாள் தவிசாளர்களுக்கு, வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் தொழில்நுட்பக் குழுக்கள் மற்றும் தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்ட காப்புறுதிக் கம்பனிகளின் தொழில்நுட்ப மதியுரைக் குழுக்களினதும் தொழிற்பாட்டுக் குழுக்க ளினதும் அங்கத்தவர்களுக்கு, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின், வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில்

கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதிய மற்றும் மீள் காப்புறுதி நடவடிக்கைகளில் பரஸ்பரம் இணைந்து பணியாற்றிய காப்புறுதிக் கம்பனிகளின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு, நம் மீது நம்பிக்கை வைத்த, பொறுப்புகளை ஒப்படைத்த, வெற்றிகரமான செயலாற்றுகையுடன்கூடிய ஓர் ஆண்டாக்கிக் கொள்ள பங்களிப்பாற்றிய ஏனைய அனைத்துத் தரப்பினர்களுக்கும் நான் இவ்வேளையில் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஒப்பம்:**

**சேனக்க டி. அபேகுணவர்த்தன**

*PGD. BBM (UK), MBA (USA), DIIR*

தவிசாளர்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

# தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் – ஒரு பொழிப்பு

எதிர்பாராத சுகாதார இடர்கள், தனிநபர் விபத்துகள், சொத்து இழப்புகள் சார்பாக பங்களிப்புக் காப்புறுதித் திட்டங்களின் மூலம் நன்மைகளையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் பொருட்டு 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டது. நன்மைகளை வழங்கும்போது தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் அக்ரஹார காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டம், 20% சதவீத மீள் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டம் என்பன அமுல்படுத்தப்பட்டன. அத்துடன், வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் உள்வாங்கப்பட்டது.

நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு (8) உறுப்பினர்கள் அடங்கிய சபை ஒன்றினால் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் முகாமை செய்யப்படுவதுடன், நிதி, திட்டமிடல் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் உத்தியோகத்தரையும், சுகாதார அமைச்சைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஓர் உத்தியோகத்தரையும், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பெயர்குறிக்கப்படும் ஓர் உத்தியோகத்தரையும் உள்ளடக்கியதாக இது அமையும்.

இச்சபையின் ஓர் உறுப்பினரை அதன் தவிசாளராக நியமிக்கும் தத்துவம் அமைச்சருக்கு உண்டு. சட்டத்தின் பிரகாரம் சபையின் சகல உறுப்பினர்களும் நியமிக்கப்படும் திகதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப் பகுதிக்குப் பதவி வகிக்க வேண்டும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிருவாகப் பொறுப்பு, தவிசாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதுடன், சொல்லப்பட்ட பணியில் அவருக்கு முகாமையாளர்களும் உதவி முகாமையாளர்களும் ஒத்தாசை அளிப்பர்.

# சூழல் மீளாய்வு

2008 ஆம் ஆண்டில் 34,553 மில்லியன் ரூபாவாக இருந்த மொத்த கட்டுப்பணத் தொகையுடன் ஒப்பிடும்போது 2009 ஆம் ஆண்டில் 33,483 மில்லியன் ரூபா மொத்த எழுத்திலான கட்டுப்பணத் தொகையுடன் 3.1% சதவீத மறைப் பெறுமான வளர்ச்சி விகிதத்தை பொதுக் காப்புறுதி வியாபாரம் சுட்டியுள்ளது. காப்புறுதித் தொழிலில் நிலவும் கடும் போட்டிநிலை காரணமாக உருவான விலை யுத்தமும் உலக மற்றும் நிதி நிறுவனங்களின் சரிவுடன் உலகளாவிய நிதி நிலைமை வீழ்ச்சியும் காரணமாக மொத்த எழுத்திலான கட்டுப்பணத் தொகையின் மறைப் பெறுமான வளர்ச்சி விகிதம் அதிகரித்ததும் இதன் மீது பாதிப்புச் செலுத்திய காரணிகளுள் ஒன்றாகும். நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதித் தொழிலின் முழுமொத்த எழுத்திலான கட்டுப்பணத் தொகை 2009 ஆம் ஆண்டில் 57,252 மில்லியன் ரூபா பெறுமானமொன்றைப் பதிவு செய்தது. இது 58,166 மில்லியன் ரூபாவாகிய மொத்த எழுத்திலான கட்டுப்பணத் தொகையின் 2008 ஆம் ஆண்டின் பெறுமானத்தில் 1.57% சதவீத வீழ்ச்சியாகும். இத் தசாப்தத்தின் இறுதிப் பாகத்துடன் ஒப்பிடும்போது 2009 ஆம் ஆண்டில் கட்டுப்பணத் தொகை வருமான வளர்ச்சியிலான வீழ்ச்சி மொத்தத் தேசிய உற்பத்திக்கு 1.195% சதவீத குறைந்த பங்களிப்பொன்றை வழங்குவதாகும்.

மொத்த எழுத்திலான கட்டுப்பணத் தொகை சிறிய அளவிலான குறைவொன்றைப் பதிவுசெய்தபோதும், 2009 ஆம் ஆண்டின் இறுதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குரிமையாளர் நிதியத்தை அதற்கு முந்திய ஆண்டின் 25,055 மில்லியன் ரூபா பெறுமானத்துடன் ஒப்பிடும்போது 15.96% சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைச் சுட்டிக் காட்டியுள்ளது. 2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு சகல காப்புறுதிக் கம்பனிகளினதும் மொத்தச் சொத்துக்கள் 181,045 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது 2008 ஆம் ஆண்டின் இறுதியில் 155,994 மில்லியன் ரூபாவாக இருந்த மொத்தச் சொத்துக்கள் அளவுடன் ஒப்பிடும்போது 16.06 சதவீத வளர்ச்சியாகும். 2009 ஆம் ஆண்டின் இறுதியில் பொதுக் காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபடும் 15 காப்புறுதிக் கம்பனிகள் இலங்கையில் இயங்கின. அவற்றுள் கணிசமானவை தனியார்துறைக்குச் சொந்தமானவையாக இருந்தன. எனினும், 2010 ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதிச் சபையின் (IBSL) கீழ் பதிவுசெய்யப்பட்ட 19 காப்புறுதிக் கம்பனிகள் இருந்தன.

2009 ஆம் ஆண்டில் அரச துறையுடன் தொடர்புபட்ட காப்புறுதிக் கம்பனிகள் தலைதூக்க ஆரம்பித்ததன் ஊடாக இலங்கையின் காப்புறுதிக் கம்பனிகள் மீது உபாயமுறை ரீதியான பாதிப்பொன்று ஏற்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமும், மர்சன்ட் வங்கிக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட MBSL காப்புறுதிக் கம்பனியும், மீண்டும் அரசுடைமையாக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அரசதுறை சார்ந்த காப்புறுதிக் கம்பனிகளாகும். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 2002 ஆம் ஆண்டு முதல் ஒரு தனியார் காப்புறுதித் தொழில்முயற்சியாக இயங்கி வந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றத் தீர்ப்பொன்றுடன் மீண்டும் அது ஒரு பகிரங்க நிறுவனமாக மாற்றமடைந்தது. மக்கள் வங்கிக்கு உரித்தானதாக இருக்கும் பீப்பல்ஸ் லீசிங் கம்பனிக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட பீப்பல்ஸ் இன்சுவரன்ஸ் கம்பனியும் 2009 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டிணைக்கப்பட்டது. சுனாமி பேரனர்த்தம் காரணமாக 2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பின்னடைவிலிருந்து மீண்டு காப்புறுதித் தொழில் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளது என்பதை கடந்த நான்கு ஆண்டு காலத்தில் காப்புறுதித் தொழில் சுட்டி நிற்கிறது. கணிசமான அபிவிருத்திகளும் ஒழுங்குறுத்தல் சார் மாற்றங்களும் காப்புறுதித் தொழிலில் இன்று இடம்பெற்று வருகின்றன. தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தில் உத்தேச திருத்தங்கள் கொண்டு வரப்பட்டமை, அவ்வாறான ஒரு மாற்றமாகும். பொதுக் காப்புறுதித் தொழிலில் பரந்த அளவில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அரச துறை யிலிருந்து தனியார் துறை வரை தமது செயல் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்கும் குறித்த திருத்தங்களின் ஊடாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வசதியாக அமையும்.

# கூட்டுரிமைச் சமூகப் பொறுப்பு

பங்குரிமையாளர்கள், பாத்தியதையுடையோரின் அபிலாசைகள் மீது கவனம் செலுத்துவதுடன், கட்டாயமான பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூகத் தேவைப்பாடுகளில் சமநிலையொன்றை அல்லது இணைப்பொன்றை ஏற்படுத்திக்கொள்வதன் ஊடாக 'மிகவும் பொறுப்புள்ள கூட்டுரிமை பிரஜை' என்ற தனது கூட்டுரிமை புகழுருவை மேம்படுத்திக்கொள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் முயற்சிக்கிறது.

அரசாங்கத்தின் பொருளாதார சுமையைக் குறைக்கும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் 2009 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திட்டத்திற்கு 2.25 பில்லியன் ரூபாவைக் கொடையாக வழங்கியது.



மேலும், வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் தொடர்பான விகிதத்தைத் தீர்மானிக்கும் செயன்முறையில் தேசப் பற்றுள்ள இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படும் தனிநபர் திடீர் விபத்துக் காப்புறுதி உத்தரவாதத்திற்காக மிகவும் சலுகை விகிதமொன்று 2009 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் மூலம் எல்ரீரீஈ பயங்கரவாத நடவடிக்கைகளின்போது விபத்துக்கள் காரணமாக காயமடைந்த அல்லது மரணத்தைத் தழுவியவர்கள் சார்பாக குறிப்பிடத்தக்க அளவான உரிமைக் கோரிக்கைத் தொகைகள் செலுத்தப்பட்டன.

பாதுகாப்புப் படையினரின் ஒப்பற்ற பிரயத்தனத்திற்கும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் துணிச்சலான தலைமைத்துவத்திற்கும் கௌரவம் அளிக்குமுகமாக 2.5 மில்லியன் ரூபா நன்கொடையொன்றை வழங்கியதன் மூலம் எல்ரீரீஈ போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு அரசாங்கத்திற்கு உதவ நிதியத்தால் முடிந்தது.

எல்ரீரீஈ போருக்கு முகங்கொடுத்து போராடிய பாதுகாப்புப் படையினரில் காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் ஒரு நாள் சம்பளத்தை அன்பளிப்புச் செய்தது.

பாதுகாப்புப் படையினரால் சிவில் பிரஜைகள் விடுவித்துக் கொள்ளப்பட்டதை அடுத்து, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மெனிக்ஃபாம் முகாமிற்கு உணவு, பானங்களை அன்பளிப்புச் செய்தது.



தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் உயர் சலுகை அடிப்படையிலான தவணைத் தொகைகளுடன் அக்ரஹார காப்புறுதித் திட்டம், 'விதேஷ ரெக்கியா' வெளிநாட்டு வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டம் போன்ற சமூக நலனோம்புகையின் மீது சார்ப்புப் போக்குடைய காப்புறுதித் திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்தியுள்ளது.

# கூட்டுரிமை ஆளுகை

## அறிமுகம்

உரிய நட்ட ஆபத்து முகாமைத்துவம், அமைப்பின் வசமுள்ள வளங்களைப் பொறுப்புடன் கையாளல் என்பவற்றின் ஊடாக குறிக்கோள்களை எய்துவதை உறுதிப்படுத்திக்கொண்டு உபாயமுறைச் செயற்பாட்டு இலக்குகளை முன்வைத்து பணிப்பாளர் சபை யினாலும் நிறைவேற்று முகாமைத்துவத்தினாலும் செயற்படுத்தப்படும் பல பொறுப்புகளும் நடைமுறை களும் தொழில்முயற்சி ஆளுகை என அழைக்கப்படுகிறது.

தொழில்முயற்சி ஆளுகை, அமைப்பின் பூரண வகைகூறுந்தன்மை (Accountability) சட்டகத் தைக் கொண்டமைந்தது. சமநிலையாகப் பேணிச்செல்ல வேண்டிய இணங்கிச்செல்லல், செயலாற்றுகை என தொழில்முயற்சி ஆளுகை இரு பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

இணங்கிச் செல்லல் என்பது 'கூட்டுரிமை ஆளுகை' என்றும் அழைக்கப்படுகிறது. சபையின் கட்டமைப்புகள், வகிபாகங்கள், நிறைவேற்று ஊதியம் போன்றன அதன் கீழ் அடங்குகின்றன. பல்வேறு கூட்டுரிமை ஆளுகை பொது ஒழுங்குணர்வு குலைவுகள் காரணமாக அண்மிய ஆண்டுகளில் அதற்கு குறிப்பிடத்தக்க உத்தரவாதமொன்று கிடைக்கப் பெற்றிருந்தது. இத்துறையில் எதிர் காலத்தில் தொடர்ந்தும் அபிவிருத்திசார் நிலைமை - யொன்று ஏற்படும். விதிக்கோவைகள் அத்துடன்/ அல்லது நியமங்களை விதிப்பதன் மூலமும் அவற்றுடன் இணங்கிச் செயற்படுவதை உறுதிப் படுத்திக் கொள்வதன் மூலமும் இந்நிலைக்கு பொதுவான தீர்வுகளைக் காணலாம். சிறந்த கூட்டுரிமை ஆளுகைச் செயன்முறைகள் - உதாரணமாக: கணக்காய்வுக் குழுக்கள் பயனுறுதி வாய்ந்த விதத்தில் செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் கையாளப்படக்கூடிய சிறப்பாக நிறுவப்பட்ட நுண்ணாய்வுப் பொறிமுறைகள் உள்ளன. சிறப்பாக ஆளப்படும் ஒரு சூழலின் வெற்றிநிலையின் தீர்மானகரமான காரணியாக பலமான கூட்டுரிமை ஆளுகையின் முக்கியத்துவம், தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் உயர் உபாயமுறை மட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அது போன்ற ஒன்றினால் இறுதியில் செயற்பாட்டு விளைவு, வினைத்திறன், சிக்கனத்தன்மை என்பவற்றை மேம்படுத்தி ஒழுக்கமுடைமை, வெளிப்படைத் தன்மை, சுயாதீனத்தன்மை, வகைகூறும்தன்மை, பொறுப்புடைமை, நியாயத்தன்மை, சமூகப் பொறுப்பு டைமை முதலான மிக்குயர் கூட்டுரிமை ஆளுகைப் பெறுமானங்கள் அமுல்படுத்தப்படும் அதேவேளையில், முனைப்பான புகழுரு அதிகரித்து பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கை பேணப்படும்.

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ், இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தி னால் வெளியிடப்பட்ட அதிசிறப்பான நடைமுறைகள் குறித்த கூட்டுரிமை ஆளுகை விதிக்கோவையின தும் நல்லாட்சிக்கான பொதுவான தொழில்முயற்சி வழிகாட்டுநெறிகளின் குறித்த துறைகள் மீதும் உரிய கவனம் செலுத்தி, 2006 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் தாபிக்கப் பட்டது முதற்கொண்டு அதன் கூட்டுரிமை ஆளுகை நடைமுறைகள் பிரயோகிக்கப்பட்டன.

## நிதி மதிக்கூர்மை

2009 ஆம் ஆண்டில் முகாமைத்துவச் சபையின் நிதி மதிக்கூர்மை நிதி, திட்டமிடல் அமைச்சின் பிரதம கணக்காளராலும் நிதி, திட்டமிடல் அமைச்சின் மேலதிகச் செயலாளரினாலும் சிறப்பான முறையில் பலப்படுத்தப்பட்டது.

## காப்புறுதி மதிக்கூர்மை

2009 ஆம் ஆண்டில் முகாமைத்துவச் சபையின் காப்புறுதி மதிக்கூர்மை, இலங்கை காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் அதிபதியினால் சிறப்பான முறையில் பலப்படுத்தப்பட்டது.

## முகாமைத்துவச் சபை

நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்கள் அடங்கிய சபை

ஒன்றினால் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் முகாமை செய்யப்படுகிறது. நிதி அமைச்சின் ஒரு பிரதிநிதியும், சுகாதார அமைச்சின் ஒரு பிரதி நிதியும், பொது நிருவாக அமைச்சின் ஒரு பிரதிநிதி யும் இலங்கை காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்புச் சபை யின் பணிப்பாளர் அதிபதியும் நிதி, வங்கி, காப்புறுதி, முகாமைத்துவம், சட்டம் ஆகிய துறைகளைச் சார்ந்த நிபுணர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சரினால் பெயர் குறிக்கப்படும் வேறு ஆட்கள் மூவரும் குறித்த முகாமைத்துவச் சபையில் அங்கம் வகிப்பர். ஒரு பிரதிநிதியை அதன் தவிசாளராக நியமிக்கும் தத்துவம் அமைச்சருக்கு உண்டு. இவ்வாறு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து சபையின் சகல உறுப்பினர்களும் 05 ஆண்டு காலத்திற்குப் பதவி வகிக்க வேண்டும். தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை என்ற தலைப்பின் கீழ் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

## உள்ளகக் கட்டுப்பாடு

2009 ஆம் ஆண்டில் பிரிவுகளின் உள்ளகக் கணக்காய்வு, வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் உள்ளிட்ட உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

## கணக்காய்வுக் குழு

2009 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழு அமைக்கப்பட்டதுடன், அதன் நோக்கெல்லை வருமாறு: –


1. உள்ளகக் கணக்காய்வுப் பொறுப்புகளை நிர்ணயித்தலும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்களின் மீளாய்வும்.
2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளும், உள்ளக ஆளுகை முறைமையின் மீளாய்வும் மதிப்பீடும்.
3. கிரய விளைவுப் பெருக்க செயலாற்றுகையை அடிக்கடி மீளாய்வு செய்தலும், விரயமாகும் செலவினங்கள் முதலியவற்றை இல்லாமல் செய்தலும்.
4. வெளிநிலை கணினிகளுடன் கூட்டிணைவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வெளிநிலை முகாமைத்துவக் கடிதங்களில் அடங்கியுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதலும்.
5. சட்டதிட்டங்கள், விதிகள், நியதிகள், சுற்றுநிருபங்களுக்கு இணங்க செயலாற்றப்படுவதை உறுதியாக தேடி அறிந்துகொள்ளல்.
6. கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயலாற்றுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்தல்.
7. மாற்றுத் தீர்வுகளாக நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்யும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வு/வெளிநிலைக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்களை மீளாய்வு செய்தல்.
8. பொது தொழில்முயற்சிகள் பற்றிய குழுவின் விதப்புரைகளும் கட்டளைகளும் செயற்படுத்தப்படுவதை மீளாய்வு செய்தல்.
9. ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கும் பொருட்டு செயற்குழுவின் முடிவுகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல்.

## தகவல்களை வழங்குதல்

செயலாற்றுகை குறித்த மாதாந்த அறிக்கைகளையும் முன்னைய பதவிநிலைக் கூட்டங்களின் குறிப்புகளையும் ஆவணங்களையும் சபைக் கூட்டங்கள் இடம்பெறுவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்னரே அறிந்துகொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு விநியோகிக்கப்படும்.

உபாயமுறைத் தீர்மானங்களுக்கு வரும்பொருட்டு தவிசாளர் உள்ளிட்ட சபை மாதாந்தம் கூடுகிறது. 2008 ஆம் ஆண்டில் பத்து விடுத்தங்கள் சபை கூடியுள்ளது.

# நட்டஆபத்து முகாமைத்துவம்




## அறிமுகம்

நட்ட ஆபத்து முகாமைத்துவம் என்பது தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் உபாயமுறை முகாமைத்துவத்தின் ஒரு மையப் பகுதியாகும். ஒவ்வொரு செயற்பாட்டினாலும் அல்லுது சகல செயற்பாடுகளின் தொகுதியினாலும் ஊடாக நிலைபேறான நன்மைகளை அடைந்துகொள்வதை இலக்காகக்கொண்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் இடர் முகாமைத்துவச் செயன்முறையின் ஊடாக தமது செயற்பாடுகளுடன் இணைந்துள்ள நட்ட ஆபத்துகள் மீது படிப்படியாகக் கவனத்திற் கொள்ளப்படுகிறது. மேற்சொன்ன நட்ட ஆபத்துகளை இனங்கண்டு, அவற்றுக்கு உரிய தீர்வு நடவடிக்கைகளை எடுப்பதன் மீதான சிறப்பான நட்ட ஆபத்து முகாமைத்துவத்தினால் அடிப்படையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளது. நிறுவனத்தின் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய சகல காரணிகளினாலும் ஏற்படக்கூடிய அனுகூலங்கள், பிரதிகூலங்களைப் புரிந்து கொள்வதன் ஊடாக நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்கும் உயர்ந்த பட்ச அளவில் நிலைபேறான பெறுமானமொன்றைச் சேர்ப்பதே தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நோக்கமாகும். தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் உள்வாரியான மற்றும் சுற்றாடல் பகுப்பாய்வு, நோக்கங்களை நிர்ணயித்தல், நிகழ்வுகளை இனங்காணல், நட்ட ஆபத்துகள் தொடர்பான மதிப்பீடு, செயல் நடைமுறைகளைத் தெரிவுசெய்தல், நிருவாக அலுவல்களை நிறுவுதலும் செயற்படுத்தலும், தகவல் களை இனங்காணல், உள்வாங்கிக்கொள்ளல், தொடர்பாடல், கண்காணிப்பு, மதிப்பீடு முதலான தொழில் முயற்சி நட்ட ஆபத்து முகாமைத்துவ புதிய உபாயமுறை நடைமுறைகளைக் கையாள்கிறது. தொழில்முயற்சி நட்ட ஆபத்து முகாமைத்துவ உபாயமுறைகளைக் கையாளும்போது பின்வரும் முக்கிய நட்ட ஆபத்துகளை இனங்காண்பதன் ஊடாக பாதிப்புகள்/பெறுபேறுகள் எண்ணிக்க ஏற்படுவதற்குள்ள வாய்ப்பகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தியுள்ளன. அதன்படி, தடுப்பு, ஒப்படைப்பு, கூட்டுப் பிரயோகம், நீக்கல், முகாமைத்துவம் முதலான நட்ட ஆபத்துக்கு எதிரான உபாயமுறைகள் கையாளப்பட்டுள்ளன.

## நட்ட ஆபத்து முகாமைத்துவத்தின் பொறுப்பு

தமது பொறுப்புகளின் ஓர் அங்கமாக நட்ட ஆபத்து முகாமைத்துவம் உபாயமுறைகளை நிச்சயிக்கும் பொறுப்பை சபையிடமும் கணக்காய்வுக் குழுவிடமும் ஒப்படைத்துள்ளது. நட்ட ஆபத்து மற்றும் உள்வாரியான கட்டுப்பாட்டை கண்காணித்தலும் நிறுவனத்தின் உபாயமுறை குறித்து ஊழியர்களை அறிவுறுத்துவது தொடர்பான பொறுப்பும் அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

### ➡ R01 - உபாயமுறை நட்ட ஆபத்து

உபாயமுறை நோக்கங்களை எய்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உபாய நோக்கம் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய இலங்கையின் காப்புறுதித் துறையுடன் தொடர்புபட்ட அரசியல், தொழில்நுட்ப, சமூக-கலாசார/பொருளாதார அபிவிருத்திகள் காப்புறுதித் துறையின் போட்டியாளர்-வாடிக்கையாளர் இயக்காற்றல்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

### ➡ R02 - சர்வதேச நட்ட ஆபத்து

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் வியாபார நடவடிக்கைகள் மீது நேரடியாகப் பாதிப்புச் செலுத்தியுள்ள சர்வதேச அரசியல் மற்றும் சமூக/பொருளாதார இயக்காற்றல்கள் தேசிய காப்புறுதி

நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் புலம்பெயர் ஊழியர்களில் பெரும்பாலானோர் வாழும் மத்திய கிழக்கு நாடுகளின் சார்புப் போக்குகள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் மீள் காப்புறுதிப் பிரிவு சார்ந்த சர்வதேச வியாபார சார்புப் போக்குகளை குறிப்பாக கண்காணிப்பதும் அதில் அடங்கும்.

### R03 – ஒப்புறுதி நட்ட ஆபத்து

அழிவுகரமான நிகழ்வுகள் ஏற்படக்கூடியதாக இருப்பதன் காரணமாக உரிமைக்கோரிக்கை செலவுகள் அதிகரிப்பதன் சுமையைக் குறைப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி, மோட்டார் வாகனக் காப்புறுதி மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 20% நிகழ்ச்சித்திட்டத்திற்காக முன்னணி உலக காப்புறுதி தரகுதாரர்களான AON Benfield நிறுவனத்துடனும், வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்திற்காக Willis Re நிறுவனத்துடனும் மீள் காப்புறுதி ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளது. அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ள சகல மீள் காப்புறுதிதாரர்களும் BBB உயர் கடன் தரவரிசைப் படுத்தல்களைக்கொண்ட மீள் காப்புறுதிதாரர்களாவர். (அதாவது, Fitch Credit Rating, Moody's Credit Rating, AM Best Credit Rating and Standard & Poor Credit Rating)

### R04 - வியாபார நட்ட ஆபத்து

வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத காப்புறுதி, மோட்டார் வாகனக் காப்புறுதி, அக்ரஹார காப்புறுதி, வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி, மீள் காப்புறுதி முதலான அநேகமான உபாய – முறை வியாபாரப் பிரிவுகளுக்கு பல்வகைமையடைதன் ஊடாக நட்ட ஆபத்து குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### R05 - அந்நியச் செலாவணி நட்ட ஆபத்து

அந்நியச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் நட்ட ஆபத்தை நீக்கும் பொருட்டு மீள் காப்புறுதி வருடாந்தக் கொடுப்பனவுக்காக உள்ளூர் வியாபார பணப் பெறுமானங்களில் மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன.

### R06 - தகவல் தொழில்நுட்ப நட்ட ஆபத்து

தகவல் தொழில்நுட்ப நட்ட ஆபத்துகளை முறியடிக்க மாற்றுத் தீர்வுகளாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வைரஸ் தாக்கத்தைத் தடுக்கும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதிய அலுவலகத்தின் கணினிகளில் Sophos Anti-virus பக்கேஜ் நிறுவப்பட்டுள்ளது. முறைமைகள் செயல் இழப்பதன் மூலம் எழக்கூடிய நட்டங்கள் Backup Storage Systems மற்றும் தொடர் வலு முறைமைகள் ஊடாக குறைக்கப்பட்டுள்ளன.

### R07 - முதலீட்டுக் கடன் நட்ட ஆபத்து

முதலீட்டுக் கடன் நட்ட ஆபத்தைக் குறைந்த மட்டத்தில் எளிதுபடுத்தும் பொருட்டு திறைசேரி உண்டியல்கள், REPOs , திறைசேரி முறிகளில் நட்ட ஆபத்துகள் அற்ற முதலீடுகள் அரச வங்கிகளில் மாத்திரம் செய்யப்படுகின்றன.

### R08 - செயற்பாட்டு நட்ட ஆபத்து

செயற்பாடுகளை கணினிமயப்படுத்துவதன் ஊடாக செயற்பாட்டு நட்ட ஆபத்துகளைக் குறைக்கப்படுகின்றன. கட்டுப்பணங்களைத் திரட்டுதல், உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஏற்படும் வழுக்களையும் முரண்பாடுகளையும் குறைத்துக் கொள்ளும் பொருட்டு வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தினதும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினதும் ஏனைய பிரிவுகளின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப் பட்டுள்ளன. மேலும், வழுக்களையும் முரண்பாடுகளையும் குறைத்துக்கொள்ளும் பொருட்டு அலுவலக செயற்பாட்டு அலுவல்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன.

### R09 - செறிவு நட்ட ஆபத்து

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி போன்ற அநேகமான வங்கிகளுக்கு முதலீடுகளை

பல்வகைப்படுத்தலின் ஊடாக செறிவு நட்ட ஆபத்து குறைக்கப்பட்டுள்ளது.

### R10 - திரவத்தன்மை நட்ட ஆபத்து

திரவத்தன்மை நட்ட ஆபத்து அல்லது உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவுகள், மீள் காப்புறுதிக் கொடுப்பனவுகள், திறைசேரிக்கான மாற்றல்கள் போன்ற ஒப்பந்த அடிப்படையிலான பிணைப்புகளைச் சமாளிக்க முடியாமை, Repos, வெவ்வேறு முதிர்ச்சிக் காலங்களைக்கொண்ட திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்களும், தொகுதிக்கடன் பத்திரங்களும் போன்ற பல்வேறு முதிர்ச்சிகளுடன்கூடிய முதலீடுகளை பல்வகைப்படுத்தலின் ஊடாக குறைக்கப்பட்டுள்ளன.

### R11- உரிமைக் கோரிக்கை கொடுத்துத் தீர்க்கும் நட்ட ஆபத்து

மோசடியான, சட்டப்படியான, தொழில்நுட்ப ரீதியான காரணிகள் காரணமாக எழக்கூடிய பிணக்குகள், உரிமைக்கோரிக்கைகளை அனுமதிக்கும்போது கடும் கண்டிப்பான ஒழுங்குவிதிகளை விதிக்க நடவடிக்கை எடுத்தல், உரிமைக் கோரிக்கைகளைச் செய்முறைப் படுத்தும் செயன்முறையில் பணிகளை ஒதுக்கிக் கொள்வதன் ஊடாக கட்டுப்படுத்தப்படுகிறது.

### நட்ட ஆபத்து மதிப்பீட்டு அச்சு வார்ப்புரு

மேற்சொன்ன பெறுபேறுகளின் அடிப்படையில், பின்வரும் நட்ட ஆபத்து மதிப்பீட்டு அச்சு வார்ப்புருவில் காணக்கூடிய நட்ட ஆபத்துகளின் தீவிரத்தன்மையின் மீது அமைந்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் முக்கிய நட்ட ஆபத்துகள் பற்றிய தடவைகளின் எண்ணிக்கைப் பகுப்பாய்வு முக்கிய கவனத்திற்கு உட்பட்டுள்ளது.

| | | தடவைகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| பெறுபேறுகள் | 1 | | | | R05 | R08 |
| | 2 | | | | R06 | |
| | 3 | R07 | R10 R02 | | | R11 |
| | 4 | R09 | | R04 | | |
| | 5 | R01 | R03 | | | |

# கணக்காய்வு அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனதுஇல / My No: ஈஎப்/ஜ/5/2009
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 2011 யூன் 16

தலைவர்,
தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம்

**தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இனங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று நிதியத்தின் தலைவருக்கு 2011 மே 02 அன்று அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

2

1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் என்பவற்றை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்குகள் சமர்ப்பிக்கப்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கப்படவேண்டியது தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியச் சபையின் பெயரிலாக இருந்த போதிலும் கணக்குகள் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் பெயரிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2009 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் 2001 சனவரி 18 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன்பிரகாரம் 11 மாத கால தாமதம் காணப்பட்டது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா. 386,440 தொகையான காரியாலய உபகரணங்களின் கொள்வனவுகள், பழுதுபார்த்தல் செலவினங்களின் கீழ் ஆண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டமையினால் காரியாலய உபகரணங்கள் அத்தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

2.2.3 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| நி.பி. 396(ஈ) | வழங்கப்பட்டு ஆறு மாதத்தினை விஞ்சிய ரூபா. 25,347,189 தொகையான காசோலைகளை வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 786 | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படாதிருந்ததுடன் ரூபா.276,701 பெறுமதியான நிலையான சொத்துக்களை அகற்றிய மைகளுக்குரிய அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

5

3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதிசார் மீளாய்வு

3.1.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 3,202,833,204 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,862,286,114 ஆகக் காணப்பட்டது.

3.1.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

சுமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகளின் பொழிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடயங்கள் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்ட போது சாதகம் (பாதகம்) சதவீதத்தில் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| தேறிய வருமானம் | 3,323,605,303 | 2,917,401,041 | 13.92 |
| மொத்த செலவினம் | 120,772,099 | 55,114,528 | (119) |
| தேறிய மிகை | 3,202,833,204 | 2,862,286,114 | 11.9 |

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீள்காப்புறுதி எல்லை 2008 ஆம் ஆண்டிலிருந்து ரூபா.1,000,000,000 தொகை வரை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் பயங்கரவாத செயற்பாடுகள் காணப்பட்ட காலப்பகுதியின்போதும் இழப்பீடு செலுத்தப்பட்ட அதி கூடிய

பெறுமதி ரூபா. 50.8 மில்லியனாக இருந்தும் தற்போது உயர் பெறுமதிகளுக்கு மீள்காப்புறுதி செய்வதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் கட்டடம் பெறப்பட்ட போது அலுவலக நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படாத கீழ் மாடிக்காக அண்ணளவாக 2½ மாத காலத்திற்காக ரூபா.245,821 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2.2 முகாமைத்துவத் திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வாடகை ஒப்பந்தத்தின் 07 ஆவது பந்தியின் பிரகாரம் 2007, 2008, 2009 போன்ற வருடங்களில் பதினொரு சந்தர்ப்பங்களின் போது நவீன மயப்படுத்தியதற்காக ரூபா. 13,758,425 தொகையானது புனருத்தாரணச் செலவாகக் காட்டப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் நவீன மயப்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவினம் ச.தொ.ச. நிறுவனத்தினால் செய்யப்பட வேண்டிய போதிலும் அச் செலவினமானது நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத் தொகையினை ச.தொ.ச. நிறுவனத்திடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கீழ் மாடிக்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து மாதாந்தம் ரூபா. 88,808 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வாடகையினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிதிய நிர்வாகம்
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) மீள்காப்புறுதி
(ஈ) கணக்கீட்டு கணனி முறைமை
(உ) காப்புறுதி இழப்பீடு
(ஊ) வருமானச் சேகரிப்பு

எச்.ஏ.எஸ்.ஸமரவீர
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# வருமானக் கூற்று

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | குறிப்புகள் | 2009 அக்ரஹாரவும் பிறவும் | 2009 வே.க.சி.கொ.ப.நி. | 2009 மொத்தம் | 2008 மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ***வருமானம்*** | | | | | |
| தேறிய உழைக்கப்பட்ட கட்டுப்பண வருமானம் | **01** | 1,784,327,414.43 | 2,235,158,805.80 | **4,019,486,220.23** | 3,427,950,662 |
| **நன்மைகளும், இழப்புகளும், செலவுகளும்** | | | | | |
| காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளும் நன்மைகளும் | **02** | (1,378,159,985.96) | (697,776,819.61) | **(2,075,936,805.57)** | (1,736,355,732) |
| | | 406,167,428.47 | 1,537,381,986.19 | **1,943,549,414.66** | 1,691,594,930 |
| **பிற வருமானம்** | | | | - | - |
| முதலீட்டு வருமானம் | | 140,551,227.14 | 1,223,907,847.03 | **1,364,459,074.17** | 1,205,463,441 |
| மென் கடன்கள் மீதான வட்டி | | - | 15,125,027.42 | **15,125,027.42** | 19,424,829 |
| பிற வருமானம் | | 471,787.13 | - | **471,787.13** | 917,841 |
| | | 141,023,014.27 | 1,239,032,874.45 | **1,380,055,888.72** | 1,225,806,111 |
| **செலவினம்** | | | | - | - |
| பணியாட்டொகுதினருக்கான செலவுகள் | **03** | 31,804,923.19 | 1,319,691.71 | **33,124,614.90** | 21,470,147 |
| நிருவாகச் செலவுகள் | **04** | 44,419,579.86 | 4,826,801.25 | **49,246,381.11** | 28,264,346 |
| நிதி மற்றும் பிற செலவுகள் | **05** | 6,474,549.57 | 31,926,553.89 | **38,401,103.46** | 5,380,035 |
| **மொத்தச் செலவினம்** | | 82,699,052.62 | 38,073,046.85 | **120,772,099.47** | 55,114,528 |
| **செலவினத்துக்கு மேலான வருமானம்** | | 464,491,390.12 | 2,738,341,813.79 | **3,202,833,203.91** | 2,862,286,514 |

# ஐந்தொகை

*2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது* *(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

| | குறிப்புகள் | 2009 அக்ரஹாரவும் பிறவும் | 2009 வே.க.சி.கொ.ப.நி. | 2009 மொத்தம் | 2008 மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| ஆதனம் பொறித்தொகுதி உபகரணம் | 06 | 29,625,193.96 | 13,978,310.47 | 43,603,504.43 | 44,659,780.96 |
| முதலீடுகள் | | 1162,413,507.08 | 7,387,793,213.58 | 8,550,206,720.66 | 7,749,178,615.97 |
| | | **1,192,038,701.04** | **7,401,771,524.05** | **8,593,810,225.09** | **7,793,838,396.93** |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | | | |
| பெறப்படற்பாலவை | 07 | 332,368,396.89 | 1,747,202,021.82 | 2,079,570,418.71 | 1,988,501,988.46 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 08 | 85,101,390.32 | 25,071,612.23 | 110,173,002.55 | 239,795,257.72 |
| | | 417,469,787.21 | 1,772,273,634.05 | 2,189,743,421.26 | 2,228,297,246.18 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,609,508,488.25** | **9,174,045,158.10** | **10,783,553,646.35** | **10,022,135,643.11** |
| **உரிமைமுதலும் பொறுப்புகளும்** | | | | | |
| **உரிமை முதல்** | | | | | |
| திரண்ட நிதியம் | 09 | 1,422,321,413.25 | 7,942,531,369.40 | 9,364,852,782.65 | 8,412,019,580.13 |
| | | **1,422,321,413.25** | **7,942,531,369.40** | **9,364,852,782.65** | **8,412,019,580.13** |
| **தொழில்நுட்ப ஒதுக்கு** | | | | | |
| உழைக்கப்படாத கட்டுப்பணம் | 10 | - | 1,046,825,275.79 | 1,046,825,275.79 | 1,063,317,772.07 |
| பிற்போடப்பட்ட தரகு | 11 | - | (200,139,536.24) | (200,139,536.24) | (206,999,340.07) |
| | | **-** | **846,685,739.55** | **846,685,739.55** | **856,318,432.00** |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடப்புப் பொறுப்புகள் அல்லாதவை** | | | | | |
| அரச கொடை | | 719,190.00 | - | 719,190.00 | 719,190.00 |
| செலுத்தப்படற்பாலதான இலாபத்தரகு | 12 | - | 63,762,150.42 | 63,762,150.42 | 113,635,474.00 |
| | | **719,190.00** | **63,762,150.42** | **64,481,340.42** | **114,354,664.00** |
| **நடப்புப் பொறுப்புகள்** | | | | | |
| செலுத்தப்படற்பாலதான உரிமைக்கோரிக்கை | 13 | 157,481,448.00 | 172,018,472.88 | 329,499,920.88 | 333,321,632.00 |
| பிற செலுத்தப்படற்பாலவை | 14 | 28,986,437.00 | 149,047,426.14 | 178,033,863.14 | 306,121,334.98 |
| | | **186,467,885.00** | **321,065,899.02** | **507,533,784.02** | **639,442,966.98** |
| **மொத்த உரிமைமுதலும் பொறுப்பும்** | | **1,609,508,488.25** | **9,174,045,158.39** | **10,783,553,646.64** | **10,022,135,643.11** |

# திரட்டிய நிதியத்திலான மாற்றங்கள் பற்றிய கூற்று

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | 2009<br>அக்ரஹாரவும் பிறவும் | 2009<br>வே.க.சி.கொ.ப.நி. | 2009<br>மொத்தம் | 2008<br>மொத்தம் |
|---|---|---|---|---|
| **திரட்டிய நிதியம்** | | | | |
| 2008.12.31 இல் உள்ளவாறான திரட்டிய நிதியம் | 957,830,023.13 | 7,454,189,555.61 | 8,412,019,578.74 | 6,583,508,928 |
| முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் | | | | (33,775,862) |
| கழிக்க: திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பு | | (2,250,000,000.00) | (2,250,000,000.00) | (1,000,000,000) |
| செலவினத்துக்கு மேலான வருமானம் | 464,491,390.12 | 2,738,341,813.79 | 3,202,833,203.91 | 2,862,286,514 |
| 2009.12.31 இல் உள்ளவாறான திரட்டிய நிதியம் | 1,422,321,413.25 | 7,942,531,369.40 | 9,364,852,782.65 | 8,412,019,580 |

# காசுப் பாய்ச்சல் கூற்று

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | 2009 | 2008 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| காலப் பகுதிக்கு உரிய தேறிய இலாபம் | 3,202,833,203.91 | 2,862,286,513.65 |
| கழிக்க: திரட்டிய நிதியத்துக்கான உதவுதொகை | (2,250,000,000.00) | (1,000,000,000.00) |
| | 952,833,203.91 | 1,862,286,513.65 |
| **சீராக்கல்கள்:** | | |
| தேய்மானம் | 11,190,514.66 | 6,684,140 |
| முதலீட்டு வருமானம் | (1,364,459,074.17) | (1,205,463,441) |
| உழைக்கப்படாத கட்டுப்பண வருமானம் | (16,492,497.25) | 185,622,046 |
| பிற்போடப்பட்ட தரகு | 6,859,804.31 | (45,682,112) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | (410,068,048.54) | 803,447,147 |
| பெறப்படற்பாலவையிலான குறைப்பு | (91,068,430.25) | 233,453,837 |
| செலுத்தப்படற்பாலதான இலாபத் தரகிலான அதிகரிப்பு | (49,873,323.58) | 29,913,407 |
| முன்னைய ஆண்டுச் சீராக்கல்களின் விளைவாக இலாபத்திலான குறைப்பு | - | (33,775,862) |
| செலுத்தப்படற்பாலதான உரிமைக் கோரிக்கையிலான குறைப்பு | (3,821,711.12) | (269,501,000) |
| ஏனைய செலுத்தப்படற்பாலவையிலான அதிகரிப்பு | (128,031,264.84) | 36,428,764 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | (682,862,778.33) | 799,966,293 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான பாசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் என்பவற்றின் கொள்வனவுகள் | (10,190,446.22) | (26,136,012) |
| அரச பிணைப்பொறுப்புகளிலான முதலீடுகள் | (801,028,104.69) | (2,299,835,376) |
| உபகரண விற்பனையின் வரும்படிகள் | - | 77,789 |
| முதலீட்டு வருமானம் | 1,364,459,074.17 | 1,205,463,441 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திய தேறிய காசு** | 553,240,523.26 | (1,120,430,157) |
| **காசும் காசுக்கு நிகரானவற்றிலுமான தேறிய அதிகரிப்பு/குறைப்பு** | (129,622,255.07) | (320,463,864) |
| **காலப்பகுதியின் தொடக்கத்திலுள்ள காசும் காசுக்கு நிகரானவையும்** | 239,795,257.72 | 560,259,122 |
| **காலப்பகுதியின் இறுதியிலுள்ள காசும் காசுக்கு நிகரானவையும்** | 110,173,002.65 | 239,795,258 |
| **காசும் காசுக்கு நிகரானவற்றினதும் பகுப்பாய்வு** | | |
| கையிலுள்ள காசும் வங்கி மீதிகளும் | 93,999,851.87 | 230,795,258 |
| குறுகிய கால முதலீடுகள் | 16,173,150.68 | 9,000,000 |
| **காசும் காசுக்கு நிகரானவையும்** | 110,173,002.55 | 239,795,258 |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1.0 கூட்டுரிமைத் தகவல்கள்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், ('நிதியம்"), '2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால்" இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுத் தாபிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், கொழும்பு 10, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தையின் 70ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ளதுடன், பிரதான தொழிலிடமும் இம்முகவரியில் அமைந்துள்ளது.

செயற்பாட்டு ஆண்டில், 2009 ஆகஸ்ட் மாதத்தில் 1615/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் இந்நிதியம் தனது பொதுக் காப்புறுதி வியாபார நடவடிக்கைகளை தனியார்துறைக்கும் விஸ்தரித்துள்ளது.

## 2.0 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் விதிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க வரலாற்று முறையான ஆகுசெலவுச் சமவாயத்தின் கீழ் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகள், இலங்கை ரூபாய்களில் (ரூ.) முன்வைக்கப்படுகின்றன.

பணவீக்கக் காரணிகள் சார்பான சீர்செய்தல்கலெதுவும் இக்கணக்குகளில் செய்யப்பட்டிருக்கவில்லை.

தோதானவிடத்து, அடுத்துப் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன.

### 2.2 ஒப்பீட்டுப் பெறுமானங்கள்

நிதியத்தினால் ஒத்திசைவாகப் பிரயோகிக்கப்பட்டு முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் ஒத்திசைவாக உள்ளன. முன்னைய ஆண்டுக்கான பெறுமானங்கள், ஆண்டின் முன்வைப்புக்கு அவசியமானவிடத்தெல்லாம் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

### 2.3 மூலதனப் பிணைப்புகள்

ஐந்தொகைத் தேதியன்று உள்ளவாறாக மூலதனப் பிணைப்புகள் எவையும் இருக்கவில்லை.

### 2.4 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று, 'நேரில் முறையை' பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

# கணக்கீட்டுக் கொள்கைகள்...

## 2.5 தொடர்புபட்ட திறத்தவர் கொடுக்கல்வாங்கல்கள்

தொடர்புபட்ட திறத்தவர் கொடுக்கல்வாங்கல்கள் எவையும் இருக்கவில்லை.

## 2.6 ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைக்குப் பின்னரான முக்கியமான எல்லா நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டிருப்பதை அடுத்து, தோதானவிடத்து, நிதிக்கூற்றுகளுக்கான அவ்வக் குறிப்புகளில் சீர்செய்தல்கள் அல்லது வெளிக்காட்டல்கள் செய்யப்பட்டுள்ளன.

## 2.7 சொத்துகளும் அவற்றின் பெறுமதி மதிப்பீட்டு அடிப்படைகளும்

### 2.7.1 ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் ஆகுசெலவில் பதியப்பட்டுள்ளன.

ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் என்பது குறித்த சொத்துக்களை அவற்றின் உத்தேச பயன்பாட்டுக்காகத் தொழிற்பாட்டு நிலைமைக்குக் கொண்டுவருவதில் ஏற்பட்ட எவையேனும் செலவுகளுடன் சேர்த்து கொள்வனவு ஆகுசெலவாகும்.

அவற்றின் மூலம் நிதியத்தைக் கொண்டு நடாத்துவதற்கு நிரந்தரத் தன்மையினவான சொத்துகளைக் கொள்ளும், நீடிக்கும் அல்லது முன்னேற்றும் நோக்கத்துக்காக ஏற்பட்ட செலவினம்.

**தேய்மானங்கள்**

பின்வருமாறு சமமான ஆண்டுத் தவணைத் தொகைகளின் மூலம் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பயன்பாட்டுக் காலத்திற்கு மேல் அத்தகைய தொகையைப் பதிவழிப்பதற்கென தேய்மானத்துக்கான ஏற்பாடு, எல்லா ஆதனங்களினதும் பொறித்தொகுதிகளினதும். உபகரணங்களினதும் ஆகுசெலவின் மீது நேர்க்கோட்டு அடிப்படையைப் பயன்படுத்துவதன் மூலம் கணிப்பிடப்படுகிறது: –

| | |
|---|---|
| பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும் | – 10 ஆண்டுகளுக்கு மேல் |
| தளபாடங்களும் பொருத்திகளும் | – 08 ஆண்டுகளுக்கு மேல் |
| அலுவலக உபகரணங்கள் | – 06 ஆண்டுகளுக்கு மேல் |
| கணினிகள் | – 05 ஆண்டுகளுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | – 05 ஆண்டுகளுக்கு மேல் |

# கணக்கீட்டுக் கொள்கைகள்...

### 2.7.2 முதலீடுகள்

முதலீடுகள், ஆகுசெலவின்படி காட்டப்பட்டுள்ளன.

### 2.7.2 பெறப்படற்பாலவை

கட்டுப்பணங்கள், வட்டி மற்றும் ஏனைய பெறப்படற்பாலவை என்பவற்றினைச் சேகரிப்பதற்கான ஆற்றல், நடைபெற்றுக்கொண்டிருக்கும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது.

சேகரிக்கப்பட முடியாதவையென அறியப்பட்ட கடனாளிகளின் வேறு பெறப்படற்பாலவை பதிவழிக்கப்படுகின்றன.

### 2.7.3 காசும் காசுக்கு நிகரானவையும்

காசும் காசுக்கு நிகரானவையும், கையிலுள்ள காசு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்துக்காக வங்கிகளிலான கோரிக்கை வைப்பு என வரைவிலக்கணங் கூறப்படுகின்றன. காசும் காசுக்கு நிகரானவையும், கையிலுள்ள காசையும் நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றின் தேறிய வங்கி வைப்பையும் கொண்டுள்ளன.

### 2.8 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 2.8.1 உழைக்கப்படாத கட்டுப்பணம்

உழைக்கப்படாத கட்டுப்பணங்கள், ஐந்தொகைத் தேதிக்கு அடுத்துப் பின்னரான நட்ட ஆபத்துக் காலப் பகுதியுடன் தொடர்புபட்ட ஓராண்டின் எழுத்திலான கட்டுப்பணத்தின் அந்த விகிதாசாரங்களாக உள்ளன. உழைக்கப்படாத கட்டுப்பணங்கள், முழுமொத்தக் கட்டுப்பணத்தின் 24ஆவது அடிப்படையின்மீது கணிப்பிடப்படுகின்றன.

### 2.8.2 பிற்போடப்பட்ட தரவுத் தொகை

பின்போடப்பட்ட தரகு, உழைக்கப்படாத கட்டுப்பணம் தொடர்பான தேறிய தரகைக் குறிக்கின்றது.

### 2.8.3 இலாபத் தரவுத் தொகை

இலாபத் தரகு கணக்கிடப்பட்டு இரு தவணைப் பணங்களில் செலுத்தப்படுகின்றது. முதலாவது தவணைப்பணம், கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னரும், இரண்டாவது தவணைப்பணம், கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குப் பின்னரும் செலுத்தப்படுகின்றது.

### 2.8.4 கொடுத்துத் தீர்க்கவேண்டிய உரிமைக் கோரிக்கைகள்

இயைபான நிதியாண்டின்போது செலுத்தப்படாத அங்கீகரிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளையும், நிதியத்தின் உறுப்பினர்களினால் வெளிப்படுத்தப்பட்ட நிலுவையாகவுள்ள உரிமைக் கோரிக்கைகளுக்கான ஏற்பாட்டையும், கிடைக்கக்கூடியனவாயின், மீள் காப்புறுதிக்காகவும் மற்றும் அழிவு மீட்பு அறவீடுகளுக்காகவும் செலுத்தப்பட்ட தொடர்புபட்ட செலவுகளையும் கழிப்பனவுகளையும் உரிமைக் கோரிக்கைகள் கொண்டுள்ளன.

# கணக்கீட்டுக் கொள்கைகள்...

### 2.8.5 பிற செலுத்தப்படற்பாலவை

ஏனைய செலுத்தப்படற்பாலவை அவற்றின் ஆகுசெலவில் காட்டப்பட்டுள்ளன.

### 2.8.6 பிற ஏற்பாடுகள்

ஐந்தொகைத் தேதியன்று உள்ளவாறாக எல்லா அறியப்பட்ட ஏற்பாடுகளுக்கும் கணக்குகளில் முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 2.9 வருமானங்களும் செலவினங்களும்

### 2.9.1 வருமானம்

வருமானமானது, நிதியத்துக்குப் பொருளாதார நன்மை சேரக்கூடிய, மற்றும் நம்பிக்கையான முறையில் அளவிடப்பட முடியுமான சாத்தியத்தன்மையின் அளவுக்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம் ஏற்றங்கீகரிக்கப்படு முன்னர் பின்வரும் குறிப்பிட்ட ஏற்றங்கீகாரக் கட்டளைக்களும் ஈடுசெய்யப்படுதல் வேண்டும்:

#### (அ) கட்டுப்பண பங்களிப்பு

கட்டுப்பண உதவுதொகைகள், வருமதியாக வருகின்றபோது இனங்காணப்பபடுகின்றன.

#### (ஆ) வட்டி வருமானம

எதிர்காலச் சேகரிப்பு ஐயத்திலிருந்தாலொழிய, வட்டி திரளுகின்றவாறு வட்டி வருமானம் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

#### (இ) பிற

### 2.9.2 செலவினங்களை இனங்காணல்

நிதியத்தைக் கொண்டுநடாத்துவதிலும் ஆதனங்களையும் பொறித்தொகுதிகளையும் உபகரணங்களையும் வினைத்திறனான நிலையில் பேணுவதிலும் ஏற்பட்ட எல்லாச் செலவினங்களும் தேறிய மேன்மிகையைக் கணிப்பதில் வருமானத்திற்குப் பொறுப்பிக்கப்பட்டுள்ளது.

# நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புரைகள்

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | 2009 அக்ரஹாரவும் பிறவும் | 2009 வே.க.சி.கொ.ப.நி. | 2009 மொத்தம் | 2008 |
|---|---|---|---|---|
| **01. தேறிய உழைக்கப்பட்ட கட்டுப்பண வருமானம்** | | | | |
| அங்கத்தவர்களிடமிருந்தான உதவுதொகை | 573,518,509.75 | - | **573,518,509.75** | 595,339,833 |
| திறைசேரியிடமிருந்தான உதவுதொகை | 440,380,000.00 | - | **440,380,000.00** | 480,000,000 |
| கட்டுப்பண வருமானம் – மோட்டார் | 244,352,904.71 | - | **244,352,904.71** | 130,018,979 |
| கட்டுப்பண வருமானம் – மீள் காப்புறுதி | 473,434,837.00 | - | **473,434,837.00** | 341,170,103 |
| கட்டுப்பண வருமானம் – பாராளுமன்ற உறுப்பினர்கள் | 15,408,459.53 | - | **15,408,459.53** | 30,000,000 |
| கட்டுப்பண வருமானம் – வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 200,483,864.00 | - | **200,483,864.00** | 118,428,753 |
| கட்டுப்பண வருமானம் – பொதுக் காப்புறுதி | 194,237.13 | - | **194,237.13** | |
| பெறப்பட்ட மொத்த வே.க.சி.கொ.ப.நி. கட்டுப்பணம் | - | 2,420,345,103.68 | **2,420,345,103.68** | 2,317,492,759 |
| கட்டுப்பண மீளளிப்புகள் | - | (5,956,996.54) | **(5,956,996.54)** | (4,604,167) |
| **முழுமொத்த எழுத்திலான கட்டுப்பணம் – வே.க.சி.கொ.ப.நி.** | 1,947,772,812.12 | 2,414,388,107.14 | **4,362,160,919.26** | 4,007,846,260 |
| மீள் காப்புறுதிக் கட்டுப்பணம் | (163,445,397.69) | (195,721,798.59) | **(359,167,196.28)** | (394,273,552) |
| **தேறிய எழுத்திலான கட்டுப்பணம்** | 1,784,327,414.43 | 2,218,666,308.55 | **4,002,993,722.98** | 3,613,572,708 |
| உழைக்கப்படா கட்டுப்பண ஒதுக்குகளிலான தேறிய மாற்றம் | - | 16,492,497.25 | **16,492,497.25** | (185,622,046) |
| | 1,784,327,414.43 | 2,235,158,805.80 | **4,019,486,220.23** | 3,427,950,662 |
| **02. நன்மைகளும் நட்டங்களும் செலவுகளும்** | | | | |
| மூக்குக் கண்ணாடிகள் | 176,336,549.00 | - | **176,336,549.00** | 140,89,0949 |
| மருத்துவமனைக் கட்டணங்கள் | 449,089,973.00 | - | **449,089,973.00** | 122,404,018 |
| மகப்பேறு | 86,719,006.00 | - | **86,719,006.00** | 82,353,616 |
| திடீர் விபத்துகள் | 36,961,808.00 | - | **36,961,808.00** | 24,661,636 |
| மருத்துவக் கட்டணங்கள் | 13,832,025.37 | - | **13,832,025.37** | 261,629,904 |
| இருதய நோய்கள் | 125,931,246.12 | - | **125,931,246.12** | 119,824,506 |
| புற்றுநோய் | 18,590,588.00 | - | **18,590,588.00** | 21,946,633 |
| சாதாரண மற்றும் திடீர் விபத்து மரணம் | 177,893,355.00 | - | **177,893,355.00** | 238,245,289 |
| மோட்டார் உரிமைக் கோரிக்கைகள் | 149,425,693.77 | - | **149,425,693.77** | 30,590,384 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு உரிமைக்கோரிக்கைச் செலவுகள் | 85,934,583.03 | - | **85,934,583.03** | 10,401,500 |
| மீள் காப்புறுதி உரிமைக்கோரிக்கைச் செலவுகள் | 46,326,266.42 | - | **46,326,266.42** | 24,854,739 |
| மருத்துவக் காப்புறுதி பா.உ. | 11,112,229.00 | - | **11,112,229.00** | 19,268,220 |
| மோட்டார் உரிமைக் கோரிக்கைகள் – பொதுக் காப்புறுதி | 3,850.75 | | **3,850.75** | |
| உறப்பட்ட தேறிய உரிமைக்கோரிக்கைகள் – வே.க.சி.கொ.ப.நி. | - | 348,788,492.66 | **348,788,492.66** | 79,182,967 |
| தேறிய தரகு | 2,812.50 | 421,208,431.86 | **421,211,244.36** | 357,797,472 |
| இலாபத் தரகு | - | (72,220,104.91) | **(72,220,104.91)** | 203,099,949 |
| | 1,378,159,985.96 | 697,776,819.61 | **2,075,936,805.57** | 1,736,355,732 |
| **03. பணியாட்டொகுதி ஆகுசெலவுகள்** | | | | |
| மொத்தச் சம்பளம் | 25,753,225.10 | 1,196,656.64 | **26,949,881.74** | 17,043,399 |
| ஊ சே நி – 12% | 2,356,818.07 | 88,906.20 | **2,445,724.27** | 1,455,818 |
| ஊ ந நி | 588,721.53 | 21,811.05 | **610,532.58** | 366,009 |
| மேலதிகநேர வேலையும் விடுமுறைநாள் படியும் | 232,321.97 | 9,884.50 | **242,206.47** | 552,217 |
| ஆண்டின் மிகை ஊதியங்கள் | 1,454,044.29 | - | **1,454,044.29** | |
| ஏனைய படிகள் | 437,395.79 | 2,433.32 | **439,829.11** | 1,121,219 |
| அமயக் கூலிகள் | 982,396.44 | - | **982,396.44** | 931,485 |
| | 31,804,923.19 | 1,319,691.71 | **33,124,614.90** | 21,470,147 |

# நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புரைகள்...

*2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது*

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

| | 2009 அக்ரஹாரவும் பிறவும் | 2009 வே.க.சி.கொ.ப.நி. | 2009 மொத்தம் | 2008 |
|---|---|---|---|---|
| 04. **நிருவாகச் செலவுகள்** | | | | |
| பிரயாணச் செலவுகள் | 47,319.00 | - | **47,319.00** | 283,730 |
| தேய்மானம் | 7,110,075.12 | 4,080,439.54 | **11,190,514.66** | 6,684,140 |
| வாடகை | 3,067,399.09 | - | **3,067,399.09** | 2,480,254 |
| நீர் | 212,369.58 | - | **212,369.58** | 99,602 |
| மின்சாரம் | 3,263,237.50 | - | **3,263,237.50** | 1,263,958 |
| பணியாட்டொகுதி நலன்புரிச் செலவுகள் | 233,313.50 | | **233,313.50** | 606,228 |
| தொலைபேசி | 817,281.58 | 49,644.23 | **866,925.81** | 1,018,060 |
| அச்சிடுதலும் எழுதுகருவி வகையும் | 3,660,601.59 | 11,310.30 | **3,671,911.89** | 3,962,902 |
| அலுவலகப் பராமரிப்பு | 14,348,620.83 | 12,232.83 | **14,360,853.66** | 4,948,607 |
| சுத்திகரிப்புச் சேவைப் பராமரிப்பு | - | - | **-** | 158,820 |
| சோதனையும் மதிப்பீடு செய்தலும் | 2,528,187.50 | 49,750.00 | **2,577,937.50** | 453,190 |
| தேசத்திற்கு மகுடம் கண்காட்சி செலவுகள் | 959,453.80 | - | **959,453.80** | - |
| அன்பளிப்புகள் | 2,535,000.00 | - | **2,535,000.00** | - |
| தொழிற்றுறைசார் கட்டணம் | 55,552.00 | - | **55,552.00** | 205,750 |
| கூட்டச் செலவுகள் | 90,377.79 | - | **90,377.79** | 111,925 |
| மதியுரைக் கட்டணம் | 453,880.00 | - | **453,880.00** | 1,832.970 |
| இணையத்தள, மின்னஞ்சற் செலவுகள் | 548,021.00 | - | **548,021.00** | 448,500 |
| எரிபொருள் செலவுகள் | 168,732.00 | - | **168,732.00** | 108,990 |
| வாகனக் காப்புறுதி | 175,928.59 | 243,750.63 | **419,679.22** | 244,190 |
| பணியாட்டொகுதியினர் பயிற்சிகள் | 1,029,701.19 | - | **1,029,701.19** | 421,041 |
| செய்தித்தாள்களும் பருவ இதழ்களும் | 19,789.90 | | **19,789.90** | 41,004 |
| சட்டச் செலவுகள் | 10,550.00 | - | **10,500.00** | - |
| பாதுகாப்பு விதிப்பனவுகள் | 456,000.00 | - | **456,000.00** | 175,304 |
| அஞ்சற் செலவு | 2,507,095.00 | 51,450.00 | **2,558,545.00** | 2,463,618 |
| வாகனப் பராமரிப்பு | 121,143.30 | 328,223.72 | **449,367.02** | 251,563 |
| | **44,419,579.86** | **4,826,801.25** | **49,246,381.11** | **28,264,346** |
| 05. **நிதி மற்றும் பிற செலவுகள்** | | | | |
| வங்கி விதிப்பனவுகள் | 599,292.87 | 435,702.38 | **1,034,995.25** | 204,746.27 |
| உள்ளகக் கணக்காய்வுக் கட்டணம் | 13,000.00 | 108,008.50 | **121,008.50** | 414,922.00 |
| தேச நிர்மாண வரிச் செலவுகள் | - | 30,755,595.14 | **30,755,595.14** | 1,992,000.00 |
| முத்திரைக் கட்டணம் | 66,825.00 | - | **66,825.00** | - |
| கையுதிர்ப்பு காரணமாக ஏற்பட்ட நட்டம் | - | 147,393.17 | **147,393.17** | 32,556.00 |
| தொழினுட்ப மதியுரைகுழு வருகை கட்டணங்கள் | - | 205,500.00 | **205,500.00** | 199,500.00 |
| தொழிற்பாட்டுக் குழு வருகைக் கட்டணங்கள் | - | 123,750.00 | **123,750.00** | 155,250.00 |
| செலாவணி நட்டங்கள் | 3,403,748.18 | - | **3,403,748.18** | - |
| குழாம்களின் வருகைக் கட்டணங்கள் | - | 22,00.00 | **22,000.00** | - |
| நானாவித செலவுகள் | 282,530.02 | 9,804.70 | **292,334.72** | 493,771.20 |
| விளம்பரச் செலவுகள் | 2,109,153.50 | 118,800.00 | **2,227,953.50** | 1,1887,289.50 |
| | **6,474,549.57** | **31,926,553.89** | **38,401,103.46** | **5,380,035** |

# நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புரைகள்...

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

**குறிப்பு 06: ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் உபகரணங்களும்**

| | மோட்டர் வாகனங்கள் | அலுவலக உபகரணங்கள் | தளபாடங்களும் பொருத்துதல்களும் | மென் பொருள்கள் | பலவின சொத்துக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **ஆகுசெலவு** | | | | | | |
| 2009/01/01 அன்றுள்ளவாறான மீதி | 29,312,266 | 13,085,476 | 6,189,968 | 6,145,198 | 197,508 | **54,930,416** |
| சேர்த்தல்கள் | 300,750 | 8,770,477 | 997,345 | 121,875 | | **10,190,446** |
| கையுதிர்த்தல்கள் | - | (242,020) | (34,681) | - | (9,275) | **(285,976)** |
| 2009/12/31 அன்றுள்ளவாறான மீதி | **29,613,016** | **21,613,933** | **7,152,631** | **6,267,073** | **188,233** | **64,834,886** |
| **தேய்மானம்:** | | | | | | |
| 2009/01/01 அன்றுள்ளவாறான மீதி | 4,444,618 | 2,540,384 | 1,252,019 | 1,886,651 | 46,503 | **10,170,175** |
| ஆண்டுக்கான விதிப்பனவு | 5,867,007 | 2,916,399 | 843,873 | 1,557,401 | 5,835 | **11,190,515** |
| ஆண்டுக்கான கையுதிர்த்தல்கள் | - | (112,717) | (16,591) | - | - | **(129,308)** |
| 2009/12/31 அன்றுள்ளவாறான மீதி | 10,311,625 | 5,344,066 | 2,079,300 | 3,444,052 | 52,338 | **21,231,382** |
| | | | | | | - |
| 2009/12/31 அன்றுள்ளவாறான எழுத்துப் பெறுமதி | **19,301,391** | **16,269,866** | **5,073,331** | **2,823,021** | **135,896** | **43,603,505** |

# நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புரைகள்...

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

| *2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது* | 2009<br>அக்ரஹாரவும் பிறவும் | 2009<br>வே.க.சி.கொ.ப.நி. | 2009<br>மொத்தம் | 2008 |
|---|---|---|---|---|
| **07. பெறப்படற்பாலவை** | | | | |
| பீஎவ்ஈ இடமிருந்து பெறப்படற்பாலதான கட்டுப்பணம் | 16,397,700.00 | - | **16,397,700.00** | 14,553,053 |
| திறைசேரியிடமிருந்து பெறப்படற்பாலதானவை | 174,321,548.24 | - | **174,321,548.24** | 174,535,965 |
| பெறப்படற்பாலதான பிற கட்டுப்பணம் | 1,361,823.27 | 1,500.00 | **1,363,323.27** | - |
| பெறப்படற்பாலதான வட்டி | 46,888,434.08 | 78,930,246.31 | **125,818,680.39** | 38,283,568 |
| பெறப்படற்பாலதான கட்டுப்பணம் – வே.க.சி.கொ.ப.நி. | - | 388,014,979.26 | **388,014,979.26** | 381,344,808 |
| சிக்கன சேவை விதிப்பனவு | 10,100,889.38 | - | **10,100,889.38** | 2,000,000 |
| பெறப்படற்பாலனவான முற்பணங்கள் | 465,293.51 | - | **465,293.51** | 375,210 |
| பெறப்படற்பாலனவான மீள் காப்புறுதி கட்டுப்பணம் | 79,566,098.09 | - | **79,566,098.09** | - |
| மென் கடன்கள் | - | 1,273,523,895.66 | **1,273,523,895.66** | 1,374,977,411 |
| மீளளிக்கப்படற்பாலதான வைப்பு | 1,317,517.61 | - | **1,317,517.61** | 663,132 |
| பணியாட்டொகுதியினர் கடன் தொகை | - | 6,554,500.00 | **6,554,500.00** | - |
| முற்கொடுப்பனவு செய்யப்பட்ட காப்புறுதி | - | 176,900.59 | **176,900.59** | 174,776 |
| அங்கத்தவர்களிடமிருந்து பெறப்படற்பாலதான – காசோலை திருப்பி அனுப்புகை | 1,949,092.71 | - | **1,949,092.71** | 1,594,065 |
| | 332,368,396.89 | 1,747,202,021.82 | **2,079,570,418.71** | 1,988,501,988 |
| **08. காசும் காசுக்கு நிகரானவையும்** | | | | |
| வங்கியிலுள்ள காசு | 85,074,390.32 | 8,895,995.55 | **93,970,385.87** | 230,785,258 |
| கையிலுள்ள காசு | 27,000.00 | 2,466.00 | **29,466.00** | 10,000 |
| குறுகிய கால முதலீடுகள் | - | 16,173,150.68 | **16,173,150.68** | 9,000,000 |
| | 85,101,390.32 | 25,071,612.23 | **110,173,002.55** | 239,795,258 |
| **09. திரட்டிய நிதியம்** | | | | |
| திரட்டிய நிதியம் | 957,830,023.13 | 7,454,189,555.61 | **8,412,019,578.74** | 6,583,508,928 |
| முன்னைய ஆண்டுக்கான சீர்செய்தல்கள் | - | - | **-** | (33,775,862) |
| கழிக்க: திரட்டிய நிதியத்துக்கான உதவுதொகை | | (2,250,000,000.00) | **(2,250,000,000.00)** | (1,000,000,000) |
| செலவினத்துக்கு மேலான வருமானம் | 464,491,390.12 | 2,738,341,813.79 | **3,202,833,203.91** | 2,862,286,514 |
| | 1,422,321,413.25 | 7,942,531,369.40 | **9,364,852,782.65** | 8,412,019,580 |
| **10. உழைக்கப்படாத கட்டுப்பணம்** | | | | |
| 2008/12/31 அன்றுள்ளவாறான மீதி | - | 1,063,317,773.04 | **1,063,317,773** | 877,695,726 |
| ஆண்டுக்கான ஏற்பாடு | - | (16,492,497.25) | **(16,492,497)** | 185,622,046 |
| 2009/12/31 அன்றுள்ளவாறான மீதி | - | 1,046,825,275.79 | **1,046,825,276** | 1,063,317,772 |

# நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புரைகள்...


| | | | | |
|---|---|---|---|---|
| **11. பிற்போடப்பட்ட தரகு** | | | | |
| 2008/12/31 அன்றுள்ளவாறான மீதி | - | 206,999,340.55 | **206,999,341** | 161,317,228 |
| ஆண்டுக்கான ஏற்பாடு | - | (6,859,804.31) | **(6,859,804)** | 45,682,112 |
| 2009/12/31 அன்றுள்ளவாறான மீதி | - | 200,139,536.24 | **200,139,536** | 206,999,340 |
| **12. செலுத்தப்படற்பாலதான இலாபத் தரகு** | | | | |
| செலுத்தப்படற்பாலதான இலாபத் தரகு (2010 இல் செலுத்தப்படற்பாலது) | - | 63,762,150.42 | **63,762,150.42** | 113,635,474 |
| | - | 63,762,150.42 | **63,762,150.42** | 113,635,474 |
| **13. செலுத்தப்படற்பாலனவான உரிமைக்கோரிக்கைகள்** | | | | |
| செலுத்தப்படற்பாலனவான உரிமைக்கோரிக்கைகள் | 157,481,448.00 | 172,018,472.88 | **329,499,920.88** | 333,321,632 |
| | 157,481,448.00 | 172,018,472.88 | **329,499,920.88** | 333,321,632 |
| **14. பிற செலுத்தப்படற்பாலவை** | | | | |
| ஒன்றுதிரண்ட செலவுகள் | 1,851,912.13 | 80,347.99 | **1,932,260.12** | 9,728,074 |
| ஏனைய செலுத்தப்படற்பாலவை | 16,666.25 | - | **16,666.25** | 9,335,232 |
| செலுத்தப்படற்பால வே.க.சி.கொ.ப.நி. கட்டுப்பணம் | 5,848,227.68 | - | **5,848,227.68** | - |
| செலுத்தப்படற்பாலதான வீதிக் காப்பு வரி | 371,523.11 | - | **371,523.11** | 255,098 |
| செலுத்தப்படற்பாலதான கட்டுப்பண மீளளிப்பு | - | 13,093,388.88 | **13,093,388.88** | 180,869,259 |
| நலன்புரிச் சங்கத்திற்கு செலுத்தப்படற்பாலதான உதவுதொகை | 356,750.00 | - | **356,750.00** | - |
| உரிமைக்கோரிக்கைக் காசோலைகள்/ எஸ்எல்ஜபீ | 985,831.96 | - | **985,831.96** | 1,002,411 |
| செலுத்தப்படற்பாலதான கணக்காய்வுக் கட்டணம் | - | 225,000.00 | **225,000.00** | 1,146,000 |
| செலுத்தப்படற்பால பெ.சே.வரியும் தே.நி.வரியும் | 19,555,525.87 | 13,203,271.89 | **32,758,797.76** | 12,759,469 |
| செலுத்தப்படற்பாலதான மீள் காப்புறுதி | - | 122,445,417.38 | **122,445,417.38** | 91,025,791 |
| | 28,986,437.00 | 149,047,426.14 | **178,033,863.14** | 306,121,335 |


# நிதி மீளாய்வு

## கட்டுப்பண வருமானம்

| | 2008 |
|---|---|
| வே.க.சி.கொ.ப. நிதியம் | 2,317,492,759.00 |
| அக்ரஹாரா - திறைசேரி | 480,000,000.00 |
| அக்ரஹாரா – அங்கத்தவர்கள் | 595,339,833.06 |
| பாராளுமன்ற உறுப்பினர்கள் | 30,000,000.00 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 118,428,752.50 |
| மோட்டார் வாகன | 130,018,979.44 |
| மீன் காப்புறுதி | 341,170,102.84 |

| | 2009 |
|---|---|
| வே.க.சி.கொ.ப. நிதியம் | 2,420,345,103.68 |
| அக்ரஹாரா - திறைசேரி | 440,380,000.00 |
| அக்ரஹாரா – அங்கத்தவர்கள் | 573,518,509.75 |
| பாராளுமன்ற உறுப்பினர்கள் | 15,408,459.53 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 200,483,864.00 |
| மோட்டார் வாகன | 244,352,904.71 |
| மீன் காப்புறுதி | 473,434,837.00 |
| பொதுக் காப்புறுதி | 194,237.13 |



# நிதி மீளாய்வு...


2007 ஆம் ஆண்டில் இரண்டு காப்புறுதித் திட்டங்கள் (எனின், அக்ரஹார காப்புறுதித் திட்டமும் வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத காப்புறுதியும்) மாத்திரமே தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டன. எனினும், 2008 ஆம் ஆண்டில் வியாபார அலுவல்கள் விரிவடைந்தவுடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம், மீள் காப்புறுதித் திட்டம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டன. மேற்சொன்ன காப்புறுதித் திட்டங்களின் ஊடாக முறையே 30 மில்லியன் ரூபா, 130 மில்லியன் ரூபா, 341 மில்லியன் ரூபா, 118 மில்லியன் ரூபா என்றவாறு கட்டுப்பண வருமானமொன்று பதிவானது. வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் விஸ்தரிக்கப்பட்டதன் மூலம் 2317 மில்லியன் ரூபாவுக்குச் சற்று அதிகமான கட்டுப்பண வருமானமொன்று பதிவானதுடன், அக்ரஹார காப்புறுதித் திட்டம் மொத்தம் 1075 மில்லியன் ரூபாவைப் பதிவு செய்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் அக்ரஹார காப்புறுதிப் பிரிவு தவிர்ந்தவிடத்து, ஏனைய சகல காப்புறுதி வகுதிகள் மூலமும் கட்டுப்பண பிறப்பாக்கத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம், அக்ரஹார காப்புறுதித் திட்டம் – திறைசேரி, அக்ரஹார – பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகனக் காப்புறுதித்திட்டம், மீள் காப்புறுதித் திட்டம் என்பவற்றின் கீழ் முறையே 2420 மில்லியன் ரூபா (4.65% அதிகரிப்பு), 440 மில்லியன் ரூபா (8.25% குறைவு), 573 மில்லியன் ரூபா (3.65% குறைவு), 15 மில்லியன் ரூபா (50% குறைவு), 200 மில்லியன் ரூபா (69.29% அதிகரிப்பு), 244 மில்லியன் ரூபா (87.94% அதிகரிப்பு), 473 மில்லியன் ரூபா (38.77% அதிகரிப்பு) என்றவாறு பதிவாகியுள்ளதுடன், புதிதாகத் தாபிக்கப்பட்ட பொதுக் காப்புறுதி முயற்சியின் கீழ் 194,000 ரூபா கட்டுப்பண வருமானமொன்று பதிவாகியுள்ளது.

**மொத்த எழுத்திலான கட்டுப்பண போக்கின் பகுப்பாய்வு**

*(ரூபா மில்லியனில்)*


| | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|
| அக்ரஹாரவும் பிறவும் | 318.90 | 925.34 | 1,694.96 | 1,947.77 |
| வே.க.சி.கொ.ப. நிதியம் | – | 2,178.01 | 2,312.89 | 2,414.39 |





கடந்த நான்கு ஆண்டுகளாக மொத்த எழுத்திலான கட்டுப்பணத்தின் போக்கைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும்போது மொத்த எழுத்திலான கட்டுப் பணத்தில் தொடர் அதிகரிப்பொன்று சுட்டிக் காட்டப்படுகிறது.


# நிதி மீளாய்வு...

### தேறிய இலாபப் பகுப்பாய்வு




2008, 2009 ஆம் ஆண்டுகளின் தேறிய இலாபத்தின் அமைப்பைப் பகுப்பாய்வு செய்யும்போது வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் பங்களிப்பு 2008 ஆம் ஆண்டில் 84% ஆகவிருந்து 2009 ஆம் ஆண்டில் 86% வரை வளர்ச்சி அடைந்திருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது.




கடந்த ஆண்டின் அதிகரிப்பு சற்று குறைந்த மட்டத்தில் காணப்பட்டபோதும், தொடர்ச்சியான அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளதாக கடந்த நான்கு ஆண்டுகளின் தேறிய இலாபத்தின் போக்கைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது.


# அக்ரஹார காப்புறுதி பற்றிய மீளாய்வு

அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரால் அறியப்படும் அரசாங்க உத்தியோகத்தர்களின் நலனோம்புகை நோக்கில் 1997 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் காப்புறுதித் திட்டம், தொடக்கத்தில் பங்களிப்புக் காப்புறுதித் திட்டமொன்றாகவே தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. எனினும், 2004 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் இரண்டாவது தடவையாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் குறித்த காப்புறுதித் திட்டம் சார்பாக அரசாங்க உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து 75/- வீதம் குறைக்கப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார்மயப்படுத்தப்பட்ட வேளை வரையிலும் இக் காப்புறுதித் திட்டம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கியது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்பட்டது. அதனையடுத்து, 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடை–முறைக்குவருமாறு மேற்சொன்ன காப்புறுதித் திட்டம் அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டதுடன். தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கீழ் தனியான ஓர் அரசாங்கத் திட்டமாக அது முன்னெடுக்கப்பட்டது.


மேற்சொன்ன திட்டத்தின் கீழ் பின்வரும் காப்புறுதி நன்மைகள் வழங்கப்பட்டன:

1. மருத்துவனைக் கட்டணங்கள் சார்பாக மருத்துவ நன்மைகள்.
2. மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவுசெய்தல்.
3. மகப்பேறு.
4. ‘நய சுரெக்கும்’ (கடன் காப்பு) கடன் திட்டம்.

அக்ரஹார காப்புறுதித் திட்டம் சார்பாக 2009 ஆம் ஆண்டிற்கான மாதாந்த இலாபத்தன்மை பகுப்பாய்வு பின்வருமாறு:




அக்ரஹார காப்புறுதித் திட்டம் சார்பாக 2009 ஆம் ஆண்டிற்கான மாதாந்த கட்டுப்பண, உரிமைக்கோரிக்கை, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:



மொத்த வருடாந்த அக்ரஹார அங்கத்தவர் பங்களிப்பு 2008 ஆம் ஆண்டில் 595 மில்லியன் ரூபாவாக இருந்து 2009 ஆம் ஆண்டில் 573 மில்லியன் ரூபா வரை குறைவடைந்துள்ளது. இது 3.67% சதவீத வீழ்ச்சியாகும்.

மொத்த அக்ரஹார – திறைசேரியின் பங்களிப்பு 2008 ஆம் ஆண்டில் 480 மில்லியன் ரூபாவாக இருந்து 2009 ஆம் ஆண்டில் 440 மில்லியன் ரூபா வரை குறை–வடைந்துள்ளது. இது 8.25% சதவீத வீழ்ச்சியாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டத்திற்கான மொத்த வருடாந்தப் பங்களிப்பு 2008 ஆம் ஆண்டில் 30 மில்லியன் ரூபாவாக இருந்து 2009 ஆம் ஆண்டில் 15.4 மில்லியன் ரூபா வரை குறை–வடைந்துள்ளது. இது 48.6% சதவீத வீழ்ச்சியாகும்.

மொத்த வருடாந்த அக்ரஹார உரிமைக் கோரிக்கைகளுக்கான செலவு, 2008 ஆம் ஆண்டில் 1,011 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் 1,085 மில்லியன் ரூபா வரை 7% சதவீதத்தால் அது அதிகரித்துள்ளது.

# மோட்டார் வாகனக் காப்புறுதி பற்றிய மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் நிறுவப்பட்டதன் பின் அரசாங்க நிறுவனங்களுக்கான வாகனங்களையும் (கட்டாயமாக) பகுதியளவு அரச உடைமையான நிறுவனங்களுக்கான வாகனங்களையும் (விருப்பத்திற்குரிய) காப்புறுதிசெய்யும் பொருட்டு மோட்டார் வாகனக் காப்புறுதி திட்டமொன்று அறிமுகம்செய்து வைக்கப்பட்டது.


தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் சுமக்கக்கூடிய கட்டுப்பணத் தொகைகளின் மீது மோட்டார் வாகனங்கள் காப்புறுதி செய்யப்படுகிறது. இத்துறை துரிதமாக வளர்ச்சியடையும் ஒன்றெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் தற்போது சொந்தத் தேவை மற்றும் தனி நபர்களுக்குச் சொந்தமான வாகனங்களும் உள்ளடங்கக்கூடிய விதத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் மூலம் வழங்கப்படும் மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டத்தின் ஊடாக எந்த ஒரு வேளையிலும் அவ்வாகனத்திற்கு எதிர்நோக்க நேரிடும் அறியப்பட்ட சகல உபத்திரவங்கள் சார்பாகவும் காப்புறுதி உத்தரவாதம் அளித்து வாகன உரிமையாளர்களுக்கு உள ஆறுதலொன்று அளிக்கப்படுகிறது. உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுச் செயன்முறையை எளிதுபடுத்தும் பொருட்டு உயர் மட்ட நிபுணத்துவம் வாய்ந்த மதிப்பீட்டாளர் குழுவொன்று நாடெங்கும் சேவை யில் ஈடுபடுத்தப் பட்டிருப்பதுடன், உரிமைக் கோரிக்கைகள் முன்வைக்கப்படும்போது குறித்த விசாரணைகளை நடாத்த அவர்களால் உடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வெள்ளப்பெருக்கு அபாயம், மூன்றாம் தரப்பு சொத்துக்களுக்கான சேதங்கள், தனிநபர் திடீர் விபத்து நன்மைகள், தீர்வை வரி அற்ற கப்பலேற்றுகைகள், தவணை அடிப்படையில் செலுத்தும் அடிப்படையில் பண்டங்கள் கொள்வனவுசெய்தல், காற்றுப் பை உத்தரவாதம், இழுத்துச் செல்லல் கட்டணங்கள், வாகன முன் புறக் கண்ணாடி காப்புறுதி உத்தரவாதம், பயிலுநர்


ஓட்டுநர் உத்தரவாதம் என்பவற்றுடன் சாரதி/ துப்புரவாக்குநர்/ கவனிப்பாளர்களுக்கான வேலையாட்கள் நட்டஈடு, பயணிகளுக்கான சட்டமுறைப் பொறுப்பு,

தனிநபர் திடீர் விபத்து நன்மைகள், ஜீஐரி முதலியன தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்படும் மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய மேலதிக காப்புறுதி உத்தரவாதங்களாகும்.

மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் சார்பாக 2009 ஆம் ஆண்டிற்கான மாதாந்த இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:




மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டிற்கான கடல் அபாயக் காப்புறுதித் திட்டத்தின் மாதாந்த கட்டுப்பண, உரிமைக்கோரிக்கை, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:




மொத்த வருடாந்த மோட்டார் வாகன கட்டுப்பண வருமானம், 2008 ஆம் ஆண்டில் 130 மில்லியன் ரூபாவாக இருந்து 2009 ஆம் ஆண்டில் 244 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இது 87.94% சதவீத அதிகரிப்பாகும்.

மொத்த வருடாந்த மோட்டார் வாகன உரிமைக் கோரிக்கைகளுக்கான செலவினம் 2008 ஆம் ஆண்டில் 30.6 மில்லியன் ரூபாவாக இருந்து 2009 ஆம் ஆண்டில் 149.4 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இது 288.47% சதவீத அதிகரிப்பாகும்.

# மீள் காப்புறுதி பற்றிய மீளாய்வு


உள்ளூர் பொதுக் காப்புறுதிச் சந்தையிலிருந்து கட்டாய மீள் காப்புறுதிப் பங்கை ஏற்றுக்கொள்ள 2007 நவம்பர் மாதம் 19 ஆந் திகதிய, 1528/20 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு தத்துவம் அளிக்கப்பட்டது. பொதுக் காப்புறுதிக் கொடுக்கல் வாங்கல்களின் ஈடுபடும் ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியின் பொதுக் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தில் (குறிப்பாகக் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக) கட்டமாய மீள் காப்புறுதிப் பங்காக 20% சதவீதத்தை கா்பபுறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் விதித்துரைத்துள்ளது. 2009 ஆகஸ்ட் மாதம் 20 ஆந் திகதிய, 1615/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம், நேரடி பொதுக் காப்புறுதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன திகதியில் இருந்து இலங்கையில் மீள் காப்புறுதி வியாபாரங்களில் ஈடுபடுவதற்கான தத்துவம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம், தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமாகும். 2008 ஜனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து சகல உள்ளூர் காப்புறுதிக் கம்பனிகளின் 20% சதவீத கட்டாய மீள் காப்புறுதிப் பங்கைப் பெற்றுக்கொண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மீள் காப்புறுதி வியாபா ரத்தில் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு செயலாற்றுவதன் மூலம் அந்நியச் செலாவணியில் பெரும் பகுதியை நாட்டிற்குள் தடுத்துக்கொள்ள நிதியம் துணிந்தது. உள்ளூர் மீள் காப்புறுதிதாரர் என்ற வகையில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், 20% சதவீத மீள் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம், மோட்டார் வாகனக் காப்புறுதி, பொதுக் காப்புறுதிக்கான உலகின் மிகப் பாரிய மீள்காப்புறுதி தரகுதாரர்களான AON Benfield Re என்ற கம்பனியைப் பயன்படுத்தி உலகில் உயர் புகழ்பூத்த அநேகமான மீள் காப்புறுதிதாரர்களுடன் இணைந்து தமது நட்ட ஆபத்துகளை நிவர்த்தித்துக் கொண்டுள்ளது.


இதனிடையே, வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்பு, பயங்கரவாத நிதியத்திற்கு உரிய தரகுக் கட்டணம், Willis Re என்ற கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நட்ட ஆபத்து மீட்டளிப்பு வேலைத்திட்டம் GIC, Best Re எனும் மீள் காப்புறுதிக் கம்பனியின் தலைமையில் இடம்பெறுகிறது. பொதுக் காப்புறுதிக்கும் மோட்டார் வாகனக் காப்புறுதிக்கும் தலைமை தாங்குவது GIC, Best Re கம்பனியாகும். ARK Syndicate என்ற வியாபாரக் கூட்டின் தலைமையில் வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் இயங்குகிறது.

மீள் காப்புறுதித் திட்டம் சார்பான 2009 ஆம் ஆண்டிற்கு உரிய மாதாந்த இலாபத்தன்மை பின்வருமாறு:



மீன் காப்புறுதித் திட்டம் சார்பாக 2009 ஆம் ஆண்டிற்கான மாதாந்த கட்டுப்பண, உரிமைக் கோரிக்கை, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:




2008 ஆம் ஆண்டில் 341 மில்லியன் ரூபாவாக இருந்த மொத்த வருடாந்த மீன் காப்புறுதிக் கட்டுப்பண வருமானம், 2009 ஆம் ஆண்டில் 473 மில்லியன் ரூபா வரையில் அதிகரித்தது. இது 38.77% சதவீத வளர்ச்சியாகும்.

மொத்த வருடாந்த மீன் காப்புறுதி உரிமைக்கோரிக்கைச் செலவினம், 2008 ஆம் ஆண்டில் 24.8 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் அது 46.3 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இது 38.77% சதவீத அதிகரிப்பாகும். மொத்த வருடாந்த மீன் காப்புறுதி உரிமைக் கோரிக்கைச் செலவினம் 2008 ஆம் ஆண்டில் 24.8 மில்லியன் ரூபாவில் இருந்து 2009 ஆம் ஆண்டில் 46.3 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இது 86.39% சதவீத அதிகரிப்பாகும்.

# வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் பற்றிய மீளாய்வு

அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் வண்ணம், 1987 ஆம் ஆண்டில் வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் தாபிக்கப்பட்டது.

இலங்கையில் உரிமம்பெற்ற காப்புறுதி நிறுவனங்களான நிதியத்தின் அங்கத்தவர்களினாலும் வெளியிடப்பட்ட, இலங்கையின் புவியியல் எல்லைக்குள் வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாதர நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் சொத்துக்களுக்கான சேதங்கள், தனிநபர் மரணம்/ உடலியற் காயங்களை உள்ளடக்குகின்றவாறு காப்புறுதிப் பத்திரங்களின் பேரில் மேலதிக காப்புறுதி உத்தரவாதங்களை வழங்குவது அதன் நோக்கமாக இருந்தது. தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் 1987 ஆம் ஆண்டு முதல் இந்நிதியம் நிருவகிக்கப்பட்டது. 2005.08.01 ஆந் திகதியில் இருந்து ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியிடமிருந்து உரிமைமாற்றம் செய்யப்பட்ட மேற்சொன்ன திட்டம், நிதி திட்டமிடல் அமைச்சினால் நிருவகிக்கப்படலாயிற்று. அதன் பின்பு, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் 18(இ) எனும் பிரிவின் கீழ் வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் 2007 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்துக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டது. இலங்கையில் ஆயுள் காப்புறுதி சாராத காப்புறுதிப் பத்திரங்களை ஒப்புறுதிசெய்யும் சகல காப்புறுதிக் கம்பனிகளும் வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் அங்கத்துவத்தைப் பெற்றிருப்பது கட்டாயத் தேவையொன்றாக இருப்பதனால், அதன் தற்போதைய அங்கத்துவத்தில் 14 காப்புறுதிக் கம்பனிகள் அடங்குகின்றன.

வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் முக்கிய செயற்பாடுகள் பின்வருமாறு:

- காப்புறுதிக் கம்பனிகள் ஊடாக கட்டுப் பணத்தைச் சேகரித்து நிதியத்திற்கு அனுப்பி வைத்தல்.

- தொழிற்பாட்டுக் குழுவின் விதப்புரையின் பேரில் காப்புறுதிக் கம்பனிகளினால் உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுகளையும் வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் மூலம் மீள்நிரப்பல்செய்தல்.

- பேரழிவுகரமான சம்பவங்கள் காரணமாக ஏற்படக்கூடிய உரிமைக்கோரிக்கை ஆகு செலவு அதிகரித்துச் செல்வதைக் குறைக்கும் பொருட்டு நம்பத்தகுந்த கடன் அளவுகள் கொண்ட வெளிநாட்டு மீள்காப்புறுதி தாரர்களுடன் நட்ட மீள் காப்புறுதி வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்தல். பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக சேதங்கள் ஏற்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட இல்ஙகை வங்கியினால் நிருவகிக்கப்பட்ட மென் கடன்களை முகாமை செய்தல்.

- பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக சேதங்கள் ஏற்பட்ட நிறுவனங்களுக்கு இலங்கை வங்கியினால் நிருவகிக்கப்பட்ட மென் கடன்களை முகாமை செய்தல்.

வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:


❖ நிதியத்தினால் உள்ளடக்கப்பட்ட வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் குறித்த நட்ட ஆபத்து உள்ளடங்கக்கூடிய வகையில் நீடிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரங்கள் காரணமாக 4 ஆம் பந்தியில் பொருள்கோடல் செய்யப்பட்டவாறு நிதியத்தின் சகல

அங்கத்தவர்களுக்கும் கிடைக்கும் காப்புறுதிக் கட்டுப்பணங்களில் வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத பகுதியின் ஊடாக அந்நிதியத்தைத் தாபித்தல்.


- புவியியல் எல்லையை விஸ்தரிப்பதற்கு ஏற்பாடுசெய்யும் வகையிலான பொதுக் காப்புறுதி நட்ட ஆபத்து உள்ளிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் புவியியல் எல்லைக்குள் காப்புறுதி உத்தரவாதத்துடன் கூடியதாக நிறுவப்பட்டுள்ள நட்ட ஆபத்து தொடர்பான காப்புறுதிப் பத்திரத்தில் பொருள் கோடல் செய்யப்பட்டுள்ளவாறு வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்பு கள், பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் சொத்து நட்டங்கள்/சேதங்கள் அல்லது ஆட்களுக்கு காயம் விளைவிக்கும் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்பு அளித்தல்.

- நிதியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடர்காப்பின்மையைக் குறைக்கும் நோக்கில் சாதகமான மட்டத்தில் மீள் காப்புறுதியின் ஊடாக நிதியத்தைப் பாதுகாத்தல்.

வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்திற்காக 2009 ஆம் ஆண்டின் மாதாந்த இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:




வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியம் சார்பாக 2009 ஆம் ஆண்டின் மாதாந்த கட்டுப்பண, உரிமைக்கோரிக்கை, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:




மொத்த வருடாந்த வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் கட்டுப்பண வருமானம், 2008 ஆம் ஆண்டில் 2,317 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் 2,420 மில்லியன் ரூபா வரை குறைவடைந்தது. இது 4.44% சதவீத வளர்ச்சியாகும்.

கொடுத்துத்தீர்க்கப்பட்ட மொத்த வருடாந்த வேலை நிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத நிதியத்தின் தேறிய உரிமைக் கோரிக்கைகள், 2008 ஆம் ஆண்டில் 79 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் அது 349 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. இது 341.7% சதவீத அதிகரிப்பாகும்.

# பொதுக் காப்புறுதி பற்றிய மீளாய்வு

2009.08.20 ஆந் திகதிய 16/5/20 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் பிரகாரம், இக் காப்புறுதித் திட்டம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.


தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் கடல் கப்பற் சரக்குகள், விமானமேற்றப்படும் சரக்குகள் சார்பாக அபாயக் காப்புறுதித் திட்டங்களை உருவாக்கியுள்ளது. அதன் மூலம் கடலிலும் தரையிலும் வானிலும் அல்லது தரையில் அல்லது உள்ளூரில் தனது பயணவழி (அமய அடிப்படையில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் உட்பட) பண்டங்களுக்கு ஏற்படும் நட்டங்கள் அல்லது அவை அழிவடைதலுக்கு எதிராக காப்புறுத்தப்பட்டவர் நட்டஈடு வழங்கப்படுவார்.

கடல் அபாய (கப்பல் கட்டுமான) காப்புறுதிப் பத்திரத்தினால், கடற்கலன்கள், குறும் கடற்கலன்கள், துறைமுக மற்றும் ஆற்று ஊர்திகள், சகல விதமான தனிப்பட்ட இன்பச் சுற்றுலாக்கலங்களும் வணிகப் போக்குவரத்து விமானங்களும் தனியார் கிளைடர் விமானங்கள், உலங்கு வானூர்திகள், தரை உபகரணங்கள், வேறு ஊர்திகளுக்கு காப்புறுதி உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. இது விமானத்திற்கு, விமானத்தின் கட்டுமானத்திற்கு, அதன் இயந்திர உபகரணங்களுக்கு நேரிடும் பௌதிக/நட்ட இழப்புகளுக்கு எதிராக கப்பல் உரிமையாளருக்கு பாதுகாப்பு அளிக்கும் பூரண நட்ட ஆபத்துப் காப்புறுதி உத்தரவாதமொன்றாகும்.


தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் தீ அபாயக் காப்புறுதிப் பத்திரத்தினால், வீட்டு கொதிகலன்கள் மற்றும் எரிவாயு கருவிகல அமைப்புகளின் வெடிப்புகள் உள்பட தீ மற்றும் மின் உபத்திரவங்களினால் நேரிடும் நட்ட சேதங்களுக்கு எதிராக காப்புறுதி உத்தரவாதம் அளிக்கின்றது. வெடிப்புகள், வன்மமான சேதம் விளைவித்தல்கள், தாக்க சேதங்கள், விமான சேதங்கள், வெடித்தல்கள், நீர்த்தாங்கி உபகரணங்கள் அல்லது குழாய் மேவுகை போன்றவற்றுடன் வெள்ளப்பெருக்கு, புவி அதிர்வு, எரிமலை வெடிப்பு, சூறாவளி, சண்டமாருதம், கடும் புயல் (டைஃபூன்), இடி மின் புயல், டொனாடோ சுழல் காற்று, சுனாமி, கடற்கோள் போன்ற மேலதிக உபத்திரவங்களையும் உள்ளடக்கும் பொருட்டு இது விஸ்தரிக்கப்படலாம். மேலும், அது வேலைநிறுத்தங்கள், கலகங்கள், சிவில் கொந்தளிப்புகள், பயங்கரவாத மற்றும் வன்மமான சேதம் விளைவித்தல்களுக்கு எதிராக உத்தரவாதம் அளிக்குமாறு விஸ்தரிக்கப்படலாம்.

இந்த நானாவித வகுப்பு காப்புறுதித் திட்டங்களின் கீழ் தனிநபர் திடீர் விபத்துக் காப்புறுதி, சத்திர சிகிச்சைகள் மற்றும் சுகாதாரக் காப்புறுதி, பணக் காப்புறுதி, பயணப்பொதி காப்புறுதி, வீடுகளுக்குக் கன்னமிடல் காப்புறுதி, வேலையாட்கள் நட்டஈட்டுக் காப்புறுதி, வியாபார இடக் காப்புறுதி, மக்கள் பொறுப்புகள் மற்றும் ஏனைய பல்வேறு வகுப்பு காப்புறுதிக்கு எதிராக உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.


தீ அபாயக் காப்புறுதித் திட்டத்திற்கான 2009 ஆம் ஆண்டின் மாதாந்த இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:




கடல் அபாயக் காப்புறுதித் திட்டத்திற்கான 2009 ஆம் ஆண்டின் மாதாந்த இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:





2009 ஆம் ஆண்டிற்கான தீ அபாயக் காப்புறுதித் திட்டத்தின் மாதாந்த கட்டுப்பண, உரிமைக்கோரிக்கை, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:





மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான 2009 ஆம் ஆண்டின் மாதாந்த இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:




2009 ஆம் ஆண்டிற்கான கடல் அபாயக் காப்புறுதித் திட்டத்தின் மாதாந்த கட்டுப்பண, உரிமைக்கோரிக்கை, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:



2009 ஆம் ஆண்டிற்கான மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் மாதாந்த உரிமைக்கோரிக்கை, கட்டுப்பண, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:





2009 ஆம் ஆண்டின் முழுமொத்த வருடாந்த பொதுக் காப்புறுதி கட்டுப்பண வருமானம் 194,237 ரூபாவாகும். 2009 ஆம் ஆண்டின் முழுமொத்த வருடாந்த பொதுக் காப்புறுதி உரிமைக்கோரிக்கை செலவுகள் 3850 ரூபாவாகும்.


# வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி பற்றிய மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் பிரகாரம், 2008 ஜூன் மாதத்தில் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டம் தாபிக்கப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடமிருந்து காப்புறுதி உத்தரவாதம் பெற்று வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நாடி இலங்கையிலிருந்து புறப்படும் 18 – 65 வயதுக்கு இடைப்பட்ட இலங்கையர்களுக்கு இதன் மூலம் காப்புறுதி உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. இரண்டு ஆண்டு கால ஒப்பந்தத்திற்கு ரூ.800+வற் வரியும் மூன்று ஆண்டு கால ஒப்பந்தத்திற்கு ரூ.850+வற் வரியும் அறவிடப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டிற்கான மாதாந்த இலாபத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு:




வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு சார்பாக மாதாந்த கட்டுப்பண, உரிமைக்கோரிக்கை, இலாபப் பகுப்பாய்வு பின்வருமாறு:




இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்:

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுவரும்போது யாதேனும் ஒரு காரணத்தால் இந்நாட்டிற்குத் திருப்பு அனுப்பப்படுதல், மரணமடைதல், இலங்கை திரும்பி மூன்று மாத காலத்துள் மரணமடைதல், ஒப்பந்த காலப்பகுதியில் குணப்படுத்த முடியாத நோய்களுக்கு அல்லது திடீர் விபத்துக்கு ஆளாதல் காரணமாக மரண–மடைதல், ஒப்பந்த காலப்பகுதியில், சேவையில் ஈடுபட்டுவரும்போது உடலியல் இயலாமைக்கு உட்படல், ஒப்பந்த காலப்பகுதியில் வேலையில் ஈடுபட்டுவரும்போது பகுதியளவில்/முற்றாக உடலியல் இயலாமைக்கு உட்படல், குடும்ப உறுப்பினர்கள் சார்பாக காப்புறுதி உத்தரவாதம், ஒப்பந்த காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில்புரியும்போது முற்றாக தற்காலிக உடலியல் இயலாமைக்கு உட்படல்.

ஒப்பந்த காலப்பகுதியில் பகுதி அளவில் தற்காலிக உடலியல் இயலாமைக்கு உள்ளாதல். புற்றுநோய், இரைப்பை அழற்சி நோய் (Gastritis), நீரிழிவு எனும் சர்க்கரை வியாதி (Diabetic) முதலியவற்றுக்கு விசேட காப்புறுதி உத்தரவாதம் பெற்றுக்கொள்ள முடியும்.

மொத்த வருடாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி கட்டுப்பண வருமானம், 2008 ஆம் ஆண்டில் 118.4 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் அது 200.5 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. இது 69.29% சதவீத அதிகரிப்பாகும்.

மொத்த வருடாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காப்புறுதி உரிமைக்கோரிக்கைச் செலவினம், 2008 ஆம் ஆண்டில் 10.4 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் அது 85.9 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. இது 726.17% சதவீத அதிகரிப்பாகும்.

# நான்காண்டுப் பொழிப்பு

## வருமான, செலவினக் கூற்று

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

| | 2009<br>மொத்தம் | 2008<br>மொத்தம் | 2007<br>மொத்தம் | 2006<br>மொத்தம் |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| தேறிய உழைக்கப்பட்ட கட்டுப்பண வருமானம்; | 4,019,486,220 | 3,427,950,662 | 2,654,902,681 | 318,902,642 |
| **நன்மைகளும் நட்டங்களும் செலவுகளும்** | | | | |
| காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளும் நன்மைகளும் | (2,075,936,806) | (1,736,355,732) | (1,423,044,038) | (242,465,993) |
| | 1,943,549,415 | 1,691,594,930 | 1,231,858,643 | 76,436,649 |
| **பிற வருமானங்கள்** | | | | |
| முதலீட்டு வருமானம்; | 1,364,459,074 | 1,205,463,441 | 528,264,787 | |
| மென் கடன் மீதான வட்டி | 15,125,027 | 19,424,829 | 38,713,576 | |
| பிற வருமானம்; | 471,787 | 917,841 | | |
| | 1,380,055,889 | 1,225,806,111 | 1,798,837,006 | 76,436,649 |
| **செலவினம்** | - | - | | |
| பணியாள் தொகுதி சார்ந்த கிரயம் | 33,124,615 | 21,470,147 | 11,500,953 | 1,333,806 |
| நிருவாகச் செலவுகள் | 49,246,381 | 28,264,346 | 14,142,950 | 1,508,940 |
| நிதி மற்றும் பிற செலவுகள் | 38,401,103 | 5,380,035 | 3,385,205 | 138,170 |
| **மொத்த செலவினம்** | 120,772,099 | 55,114,528 | 29,029,109 | 2,980,916 |
| **செலவினத்திற்கு மேலான வருமானம்** | **3,202,833,204** | **2,862,286,514** | **1,769,807,897** | **73,455,733** |

# நான்காண்டுப் பொழிப்பு...

## ஐந்தொகை

*(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | 2009 மொத்தம் | 2008 மொத்தம் | 2007 மொத்தம் | 2006 மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | |
| ஆதனமும் பொறித்தொகுதியும் உபகரணமும் | 43,603,504 | 44,659,781 | 25,240,465 | 1,461,388 |
| முதலீடுகள் | 8,550,206,721 | 7,749,178,616 | 5,449,343,240 | - |
| | 8,593,810,225 | 7,793,838,397 | 5,474,583,705 | 1,461,388 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | | |
| பெறப்படற்பாலவை | 2,079,570,419 | 1,988,501,988 | 2,221,955,826 | 511,844,970 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 110,173,003 | 239,795,258 | 560,259,122 | 13,357,202 |
| | 2,189,743,421 | 2,228,297,246 | 2,782,214,948 | 525,202,172 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 10,783,553,646 | 10,022,135,643 | 8,256,798,653 | 526,663,560 |
| | | | | |
| **உரிமை முதலும் பொறுப்புகளும்** | | | | |
| **உரிமை முதல்** | | | | |
| திரண்ட நிதியம் | 9,364,852,783 | 8,412,019,580 | 6,583,508,929 | 94,102,009 |
| மூலதன ஒதுக்கு | - | - | | |
| | 9,364,852,783 | 8,412,019,580 | 6,583,508,929 | 94,102,009 |
| **தொழில்நுட்ப ஒதுக்குகள்** | | | | |
| உழைக்கப்படாத கட்டுப்பணம் | 1,046,825,276 | 1,063,317,772 | 877,695,727 | |
| பிற்போடப்பட்ட தரகு | (200,139,536) | (206,999,340) | (161,317,228) | |
| | 846,685,740 | 856,318,432 | 716,378,499 | |
| **பொறுப்புகள்** | | | | |
| **நடப்புப் பொறுப்புகள் அல்லாதவை** | | | | |
| அரச கொடை | 719,190 | 719,190 | 719,190 | 719,190 |
| செலுத்தப்படற்பாலதான இலாபத் தரகு | 63,762,150 | 113,635,474 | 83,722,067 | |
| grant | 64,481,340 | 114,354,664 | 84,441,257 | 719,190 |
| **நடப்புப் பொறுப்புகள்** | | | | |
| மேலதிகப் பற்று | | | | |
| ஆண்டினுள் செலுத்தப்படற்பாலதான கடன் | | | | |
| செலுத்தப்படற்பாலதான உரிமைக்கோரிக்கை | 329,499,921 | 333,321,632 | 602,777,397 | - |
| பிற செலுத்தப்படற்பாலவை | 178,033,863 | 306,121,335 | 269,692,571 | 431,842,361 |
| | 507,533,784 | 639,442,967 | 872,469,968 | 431,842,361 |
| **மொத்த உரிமை முதலும் பொறுப்பும்** | 10,783,553,646 | 10,022,135,643 | 8,256,798,653 | 526,663,560 |

# கூட்டுரிமைத் தகவல்கள்

❖ **நிறுவனத்தின் பெயர்: –**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

❖ **சட்ட ரீதியான உருவாக்கம்: –**

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும்.

❖ **பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்: –**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

இல. 70, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை

கொழும்பு 10.

❖ **கணக்காய்வாளர்கள்: –**

வெளிவாரி: கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்.

உள்வாரி: உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகிறது.

❖ **வங்கியாளர்கள்: –**

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி.